விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

நாவாந்துறை
கிளை நூலகம்

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 07 செவ்வாய்க்கிழமை (24.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 309

## ஜெனரல் ஜெகத் ஜயசூரிய மீதான

# போர்க்குற்ற வழக்கால் இலங்கைக்கு பிரச்சினை

## ஐ.நா அறிக்கையாளர் எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக பிரேசில் நாட்டில் தொடரப்பட்டுள்ள போர்க்குற்ற வழக்கு, இலங்கையின் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுக்கலாம் என ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் எச்சரிக்கை செய்துள்ளார்.(23-ம் பக்.)

## சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைப்பு



23

## பேருந்தில் கஞ்சா கடத்திய குடும்பப்பெண் நேற்று கைது

(மல்லாவி)

நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்து பயணப்பையில் கேரளக் கஞ்சாவை கடத்திய குடும்பப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி - முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணியளவில இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும தெரியவருவதாவது.

கிளிநொச்சி - முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்துக்கு ஏ9 வீதி ஊடாக கேரளக்கஞ்சா திருகோணமலைக்கு கட 23

## நிலைமாறு நீதி செயற்பாடுகள் இலங்கையில் அரசியல் மயம்

## ஐ.நா வல்லுநர் கவலை

(கொழும்பு)

இலங்கையில் நிலைமாறுகால நீதி செயற்பாடுகள் அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பது ஏமாற்றம் அளிக்கிறது என்று ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பப்லோ கொழும்பில் நேற்று தெரிவித்தார்.

விரிவான நிலைமாறுகால நீதி திட்டத்தை கொழும்பு அரசு நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் தாமதம் பல்வேறு மட்டங்களிலும் கேள்வி எழுப்பியுள்ளது என்று அவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தனது இலங்கைக்கான பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பும் உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உத்தரவாதப்படுத்தலுக்கான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையா 23

## இளைஞன் சுட்டுப் படுகொலை

## முப்படையினரையும் விசாரிக்க பொலிஸார் நடவடிக்கை எடுப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு, மணியந்தோட்டம் பகுதியில் இனந்தெரியாதோரால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முப்படைகள் மற்றும் ஏனைய பாதுகாப்பு தரப்பினரை விசாரணைக்குட்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அரியாலை கிழக்கு மணியந்தோட்டம் உதயபுரத்தை சேர்ந்த கடற்தொழிலாளியான டொன்பொஸ்கோ ரிக்மன் (வயது 24) என்பவர் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30க்கும் 2.45க்கும் இடைப்பட்ட நேரப்பகுதியில் தனது நண்பருடன் அரியாலை கிழக்கு பக்கமாக சென்ற 24

## "ஒருமித்த நாடு" என்ற சொல்

## பிரச்சினைக்குரியதாகும்

## சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான செயற் குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள அறிக்கையில் "ஏகீய" எனும் சிங்களப் பதத்துக்கு வழங்கப்பட்டுள்ள தமிழ் மொழி பெயர்ப்பான "ஒருமித்த நாடு" என்ற சொல் பிரச்சினைக்குரியது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி யு.ஆர்.டி. சில்வா தெரிவித்தார்.

நேற்று அவசரமாக கூடிய இச்சங்கம் அரசியலமைப்பு தொடர்பாக முன்வைத்துள்ள இடைக்கால அறிக்கை தொடர்பில் ஆராய்ந்ததாகவும் இதன்பின்னர் இந்த 23

## உயிருக்கு ஆபத்தான நிலையில்

## தீவிர சிகிச்சை பிரிவில் தமிழ் அரசியல் கைதிகள்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் மூவரும் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் நேற்று தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஒருமாத காலத்தை எட்டவுள்ள நிலையில் அரசின் அசமந்த போக்கை கைவிட்டு அவர்களின் உயிர்களை காப்பாற்றுமாறு உறவினர்கள் மன்றாட்டமாக கேட்டுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில், உள்ள 3 தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்கு வவு 23

## காய்ச்சல் காரணமாக

## 21 நாள் பெண் குழந்தை பலி!

(இளவாலை)

இரண்டு நாள் காய்ச்சல் காரணமாக 21 நாள் பெண் குழந்தை ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

இளவாலை வடலியடைப்பை சேர்ந்த சுமன் அபிசா என்ற 21 நாளுடைய பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. 23

## யாழ் நகரில் மோ.சைக்கிள் நேற்று திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் வைத்தியசாலை 23

## இலங்கையில் தலையிடுவதற்கு ஐ.நாவுக்கு உரிமை கிடையாது

## - வாசுதேவ நாணயக்கார



(கொழும்பு)

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு ஐக்கிய நாடுகளுக்கு எந்தவித உரிமையும் கிடையாது என முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜ 24

## சிற்றூர்தி - மோ. விபத்து கண்டிவாசி யாழில் பலி

(யாழ்ப்பாணம்)

அதிவேகமாக வந்த சிற்றூர்தி தனது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியால் சென்றவரை மோதித் தள்ளிய சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி சம்பவ தினத்தன்றே யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

போகந்தலாவ கண்டியை சேர்ந்த இராசமாணிக்கம் பிரபாகரன், (வயது 34) என்ற நபரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் வியாபார நோக்கம் கருதி சுன்னாகத்தில் தங்கியுள்ளார். இவர் நேற்று முன்தினம் காலை தனது நண்பர் ஒருவரை சுன்னாகம் ரயில் நிலையத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் ஏற்றியபடி, சுன்னாகம் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணி பெண் படுகொலை இருவரது விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கர்ப்பிணி பெண் படுகொலை வழக்கின் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டுள்ள இருவரினதும் விளக்க மறியலானது எதிர்வரும் மாதம் 06 ஆம் திகதிவரை நீடித்து ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் வீட்டில் தனித்திருந்த ஏழுமாத கர்ப்பிணி பெண்ணொருவர் மர்மான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார். இக்கொலை சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை பொலிஸார் சந்தேக நபர்களாக இருவரை கைது செய்திருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு விசாரணையானது ஊர்காவற்றுறை பொலிஸாரால் மேற்கொளளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணையானது நேற்றைய தினமும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி கனகரட்னம் சுகாஸ்,

இச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பாக கடந்த வழக்கு தவணையின் போது பொலிஸாரால் சிசிரிவி காணொலியின் ஆய்வறிக்கை ஒன்று சமர்பிக்கப்பட்டிருந்தது. அவ் சிசிரிவி காணொலி அறிக்கை தொடர்பாக தெளிவற்ற நிலை காணப்படுவதால் அது தொடர்பான விண்ணப்பமொன்றை அடுத்த வழக்கு தவணையின்போது தாக்கல் செய்யவுள்ளதாக மன்றுக்கு தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து குறித்த இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 06ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ஜோய் மகிழ்மகாதேவன் உத்தரவிட்டதுடன் அதுவரை இவ் வழக்கு விசாரணைகளையும் ஒத்திவைத்தார். (ம-4)

## இலவச மருத்துவமும் பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

இலண்டனில் இருந்து வருகை தந்துள்ள திருமதி இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் அவர்களால் வழங்கப்படும் மருந்தில்லா இலவச மருத்துவ சேவையும் பயிற்சிகளையும் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் 26ஆம் திகதி வரை இல.166/3 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் உள்ள இடத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு 0764108415 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)


### ஏல விற்பனை

மரத் தளபாடங்களும் அலுமினியப் பாத்திரங்களும் சிறிய இரும்பு உபகரணங்களும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இடம்:-யா/கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலயம்
காலம்:-07.11.2017
நேரம்:-10.00 மணி

அதிபர்
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.

(1108)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## விளையாட்டு மைதானம் விசமிகளால் சேதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 25 அணிகளுக்கிடையிலான மென்பந்துச் சுற்று துடுப்பாட்டப் போட்டிகள் கடந்த இரு வாரமாக குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வந்தது. துடுப்பாட்ட மேடை நேற்றுமுன்தினம் இரவு வேளையில் இனந்தெரியாத விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நேற்று இடம்பெறவிருந்த போட்டிகளை நடத்த முடியாது போயுள்ளதாக தெரிவித்த ஏற்பாட்டுக்குழு போட்டியானது எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறும் என்று தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-281)

## சிறுநீரகப் பாதிப்புக்கள் தொடர்பான கருத்தமர்வு

'சிறுநீரக பாதிப்புகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் அதனை தவிர்க்கும் வழிமுறைகளும்' எனும் தொனிப்பொருளில் கருத்தமர்வு ஒன்று எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

தென்னைப் பயிர்ச்செய்கை சபை, கற்பக தரு சங்கத்தினரின் அனுசரணையுடன் சமூக நலன்வேலைத்திட்டமாக முன்னெடுக்கப்படும் இந்த கருத்தமர்வில் வளவாளராக அநுராதபுரம் பொது வைத்தியசாலையின் துறை சார்ந்த வைத்திய நிபுணர்கள் பங்குபற்றவுள்ளனர்.

அத்துடன் நிகழ்வின் இறுதியில் தென்னை மானியத்திட்ட பயனாளிகளுக்கு காசோலைகளும் வழங்கப்படவுள்ளதாக யாழ்.தென்னை பயிர்ச்செய்கை சபை பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் அறிவித்துள்ளார். (ம-9)


## "பெருமையுடன் வாழ்த்துகின்றோம்"

### வே.மண்டலேஸ்வரன்



எமது பாடசாலையின் ஆசிரியர்
**திரு.வே.மண்டலேஸ்வரன்** அவர்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் 2017ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசிரியருக்கான "நல்லாசிரியர்" (பிரதீபா பிரபா) விருதினை நேற்று 23.10.2017 கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் பெற்றுக்கொண்டமையினை இட்டு மகிழ்ச்சியடைவதுடன் மேலும் பல விருதுகளைப் பெறவும் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**பாடசாலைச் சமூகம்**
**மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்**

(111)


## மரண அறிவித்தல்

## திருமதி சிவதாசன் யோகேஸ்வரி



*யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைப் பிறப்பிடமாகவும், ஒட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவதாசன் யோகேஸ்வரி கடந்த 21.10.2017 சனிக்கிழமையன்று இறைபதமடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை (முன்னாள் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), சிவயோகம் (கிளி) தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான குகதாசன்-சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகளும், குகதாசன் சிவதாசனின் (முகாமைத்துவ உதவியாளர்-யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கம்), அன்பு மனைவியும், நிலக்ஷனின் பாசமிகு தாயாரும், ரஞ்சிதமலர் (லண்டன்), இரட்ணேஸ்வரன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ் பிள்ளையார் இன் உரிமையாளர்), செந்தமிழ்ச்செல்வி (லண்டன்), காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் வதனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகராஜா (லண்டன்), அமுதினி (இலங்கை), தனஞ்செயன் (லண்டன்), ரட்ணசோதி (லண்டன்), சட்குணேஸ்வரன் (கனடா), கமலதாசன், காலஞ்சென்ற ஈசன் மற்றும் விமலதாஸ் ஆகியோரின் மைத்துனியும், கமலாதேவி, கலாவதி, சத்தியவதி ஆகியோரின் சகோதரியும், ஜனனி, ஆரனி (லண்டன்), ரிஷிகேஷன், ஆரனி (இலங்கை) ஆகியோரின் சித்தியும், சர்மிளா, பவனா, நிஷா, சிவகாமி, அபிராமி, ராகவன், ஜதிகா, யாதவன், கம்சிகா, பிரியங்கா, விபூஷ்னா, உரேஷ், ஸ்ரீகணன், யதுகுலன் ஆகியோரின் பெரியதாயாரும், பிரியங்கா, மயூரிப்பிரியா, காவியன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 25.10.2017 நாளை புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல.368, உஸ்மானியா கொலேஜ் வீதி, ஒட்டுமடம்) நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**தகவல்:-திரு.குகதாசன் சிவதாசன் (கணவன்)**
**தொலைபேசி இல:-0776589443**
**திரு.இ.இரட்னேஸ்வரன் (சகோதரன்)**
**தொலைபேசி இல:-0777222715**

(1110)

## 42ஆவது பிறந்த நாளில் 165-து நினைவு நாள் சுமந்து

| மண் மகிழ | விண் மகிழ |
|---|---|
| 24 - 10 - 1975 | 13 - 05 - 2017 |



சைவப்புலவர், சைவசித்தாந்தபண்டிதர், சைவசித்தாந்த முதுகலைமாணி (M.A), ஆன்மீகச் சொற்பொழிவாளர், பிரபல ஆசிரியர்

# நித்தியானந்தன் தசீதரன்

**(நித்தியதசீதரன், N.T தரன்)**

ஐப்பசி வெள்ளிதனில் அவதரித்தீர்
சைவத்தின் காவலனாய் நாவலனாய்
பாவலனாய் பார் போற்ற பணியாற்றி
சைவ நாயன்மார் வரிசையிலே
சத்தம் சந்தடியுமின்றி சந்நிதியான் பாதமேகிட மௌனமானாய்....
அன்பு மனையாள் தவித்திருக்க அப்பா என
அழைத்திடும் இரு மழலைச் செல்வங்களின்
ஏக்கம் தவிர்த்திட இயலுமோ?
கற்பித்தல் பணிதனை இரு தசாப்தத்திற்கும் மேலாக
கண்ணியமாக மேற்கொண்டீர்...
தரணியாளும் தரனை இனி எப்பிறப்பில் நாம் காண்போம்?
உங்கள் ஆத்மா இறையடி நிழலில் பேரின்பப் பெருவாழ்வில்
எங்களையும் ஆசீர்வதிப்பீராக...

**புன்னாலை, தெல்லிப்பளை.** **குடும்பத்தினர்**
**தொ.பே:-0212215702**

(ம-154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடிப்படையின் துப்பாக்கிச் சூட்டில் முன்னாள் கடற்படை அதிகாரி உயிரிழப்பு!

## துப்பாக்கிகள், குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

திவுலப்பிட்டிய - கேன்பிடகெதர பகுதியில் நேற்று பிற்பகல் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் முன் னாள் கடற்படை அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவொன்று தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும், இதன் போது 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். தகவல் கிடைக்கப் பெற்றதும் பொலிஸ் விசேட அதிரடிப் படை யினர் சம்பவ இடத்திற்கு சென்றுள் ளனர்.

அங்கு வான் ஒன்றுக்கு முன் னால் இரு சந்தேகநபர்களும், வானுக்குள் ஆறு பேரும் இருந் துள்ளனர்.

இந்நிலையில், வீதியில் நின்று கொண்டிருந்த சந்தேகநபர்களில் ஒருவர், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்து, அதிரடிப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் பலியானார்.

இவர் முன்னாள் கடற்படை அதி காரி எனத் தெரியவந்துள்ளது.

மற்றைய 7 பேரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மேலும், சம்பவத்துடன் தொடர்பு டைய வானில் இருந்து கைக்குண்டுகள், துப்பாக்கிகள் என்பனவும் கைப்பற் றப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்த மேலதிக விசார ணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. (இ-7)


குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer), வயிற்றுவலி, வயிற்றிலெரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தேப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966.Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# நல்லூர் கந்தன் ஆலயச்சூழலில் வீதித் தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2017.10.24, 2017.10.25 ஆம் திகதிகளில் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இடம்பெறும் கந்தசஷ்டி உற்சவ கால சுவாமி வீதி உலா மற்றும் சூரசம்கார நிகழ்வுகளை முன் னிட்டு ஆலயச்சூழலினூடாக வாக னப் போக்குவரத்து பின்வருமாறு தடைசெய்யப்பட்டுள்ளது.

2017.10.24- பிற்பகல் 2.00 தொடக்கம் 6 மணி வரை, 2017. 10.24- நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 7 மணிவரை இக்காலப்பகுதியில் ஆலயச்சூழலில் ஏற்படும் பக்தர்கள் கூட்டம் அதிக ரிப்பு ஆகியவற்றை கருத்திற்கொண்டு பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப் பாணம் வருகின்ற வாகனங்க ளுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வீதி வழியாகச் செல்லும் வாகனங்களுக்குமான மாற் றுப்பாதை ஒழுங்கு ஆண்டு தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் மாற்றுப் பாதைகள் பயன் படுத்துவதன் மூலம் ஆயைச் சூழ லில் அமைதியைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் அறி வித்துள்ளார். (இ)

# கடன்களை மீளச்செலுத்தும் நாடுகளில் இலங்கை மிகவும் பின்தங்கியுள்ளது

## வருமானத்தின் 90 வீதம் வட்டி செலுத்தப்படுகிறது-சம்பிக்க

(கொழும்பு)

கடந்த தசாப்தத்தின்போது, அரச வருமானத்தில் 90 சதவீதமான அளவு, கடன் தவணைக் கட்டண ங்களையும் அவற்றுக்கான வட்டி களையும் செலுத்தவே செலவாகி றது என, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள் ளார்.

நாட்டின் மொத்தத் தேசிய உற் பத்தியில் 79.3 சதவீதமான அள வாக, நாட்டின் கடன் பொறுப்பாக உள்ளது எனத் தெரிவித்த அவர், 2017 ஆம் ஆண்டுக்கான கணக்கெ டுப்பின்படி, அரச வருமானச் சம நிலையில், 193 நாடுகளில் 143 ஆவது இடத்தில் இலங்கை காணப் படுகிறது எனவும் தெரிவித்தார்.


அரச வருமானத்தினதும் செல வினதும் அடிப்படையில், இலங்கை கீழ்நிலையிலேயே காணப்படு கிறது எனத் தெரிவித்த அவர் கடன்களைச் செலுத்துவதன் அடிப்படையில் பார்க்கும் போது, 95 நாடுகளில் 91 ஆவது இடத்திலேயே இலங்கை உள் ளது எனவும் தெரிவித்தார்.

இலங்கை, தற்போது நெருக்கடி யான பொருளாதார நிலையில் காணப்படுகிறது.

இலங்கையின் முதலீடுகளை, கவனமாக முகாமை செய்ய வேண் டிய நிலையுள்ளது. இல்லாவிடின் கடன் பொறிக்குள் இலங்கை சிக்கி விடுமெனவும் தெரிவித்தார்.

2005 தொடக்கம் 2016 வரை யிலான காலப்பகுதியில், நெடு ஞ்சாலைகளை நிர்மாணிப்பதற்கு 1,700 பில்லியன் ரூபாய் செல விடப்பட்டுள்ளநிலையில், சுகாதாரத்து க்காகவும் கல்விக்காகவும் 588 பில்லியன் ரூபாயே செல விடப்பட் டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், அம்பாந்தோட்டை துறை முகம் போலவும் மத்தள விமான நிலையம் போலவும் நெடுஞ் சாலை கள் வருவதற்கு அனுமதிக்கப்பட க்கூடாது எனத் தெரிவித்தார். (இ-7)

# ரயன் ஜயலத்திற்குப் பிணை



(கொழும்பு)

வைத்திய பீட மாணவர் அமை ப்பின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத்துக்கு பிணை வழங்கப்பட்டு ள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழு ம்பு மேல் நீதிமன்றத்தில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் இந்த பிணை வழ ங்கப்பட்டு ள்ளது.

சைட்டம் எதிர்ப்பு ஆர்ப்பா ட்டத்தின் போது சுகாதார அமை ச்சினுள் அத்துமீறி உள்நுழைந்து அங்குள்ள பொருட்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் ரயன் ஜயலத் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

இதேவேளைகடந்தஒக்ட் மாதம் 18ஆம் திகதி மாளிகாகந்தை நீத வான் நீதிமன்றத்தில் ரயன் சரண டைந்ததை தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

# முணசிங்கவால் கட்சிகளுக்கு கிடுக்குப்பிடி

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிக ளினதும் முக்கிய தலைவர்களின் பிரஜாவுரிமைகள் பற்றிய விபரங் களைக் கோருவதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணியின் தலை வர் ஷாலிலா முணசிங்க, வெளி நாட்டுப் பிரஜாவுரிமை கொண்டவர் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே, இம்முடிவு எடுக கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்கு, தேர்தல் ஆணைக்குழு, அண்மை யில் ஒன்றுகூடியிருந்தது.

முணசிங்க, இலங்கையின் அரச நிறுவனமான லிட்ரோ ஹஸ் நிறுவனத்தின் தலைவராக இரு ந்தபோது, பணச்சலவைக் குற்றச் சாட்டின் கீழ், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

இது தொடர்பான நீதிமன்ற நடவ டிக்கைகளின் போது, புதிய ஜன நாயக முன்னணியின் தலைவராக அவர் இருந்ததோடு, அவர் வெளிநாட்டுப் பிரஜையாகவுள்ளார் எனவும் வெளிப் படுத்தப்பட்டது.

இது தொடர்பாக நீண்டநேரம் ஆராய்ந்த தேர்தல்கள் ஆணைக் குழு, இலங்கையில் பதிவுசெய்யப் பட்ட அனைத்து அரசியல் கட்சிகளி னதும் முக்கிய தலைவர்களின் செயற்குழு உறுப்பினர்களின் பிரஜா வுரிமை விபரங்களைக் கோரு வதற்கு முடிவெடுத்துள்ளது. (இ-7)

# வடக்கு ஆளுநருக்கு விருது



(கொழும்பு)

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப் பட்ட "ஸ்ரீஜயவர்த்தனபுர பிரதீப பிரணாம" நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார்.

கடந்த 20 ஆம் திகதி இரவு பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற இந்நிக ழ்வில் குறித்த பல்கலைக்கழகத்தி லிருந்து வெளியேறி உயர் நிலை களில் உள்ள 42 பேருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதில் சிறந்த நேர்மையான அரசியல்வாதியாக இருந்து நாட்டி ற்கு ஆற்றிய சேவைக்காக விருது கள் 8 வழங்கப்பட்டன. இதில் வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே விருது வழங்கி கௌர விக்கப்பட்டார்.

மேலும் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, ரஞ்சித் சியம்பலா பிட்டிய, முன்னாள் அமைச்சர் மகிந்த விஜேசேகர, முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன உட்பட சங்கைக்குரிய திவியாகத யஸஸ்சி நாயக்க தேரர், சங்கை க்குரிய ஓமல்பே சோபித தேரர் மேலும் பலருக்கு விருதுகள் வழ ங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஸ்ரீஜெயவர்த் தனபுர பல்கலைக்கழக துணை வேந்தர் கலாநிதி சம்பத் அமரது ங்க, ஸ்ரீஜயவர்த்தன பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் டபிள்யு. கே.எச்.வேகபிட்டிய, சங்கத்தின் செயலாளர் கலாநிதி அபேரத்தன பண்டார, தேசிய அமைப்பாளர் ரஞ்சித் இத்தமல்கொட ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-60)


வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுவாதம் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழங்கால் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சினைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு, விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966.Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்.
Tel. 021 205 4066 / 077 872 5251


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

Apply now for New Intake 2017

## ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

**Duration**
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

## BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

**Duration**
- 1 year

UGC RECOGNIZED

**Entry Qualifications**
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



# Study Engineering with The Leader

Apply now for New Intake 2017

EQAA

## HND IN CIVIL ENGINEERING

**Entry Qualifications**
- G.C.E. A/L or G.C.E. O/L + Engineering Foundation

**Duration**
- 2 Years

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

## BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

UGC RECOGNIZED

Recognised by ice Institution of Civil Engineers

**Entry Qualifications**
- Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector



# World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2017

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

## ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

## BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

**Duration** 1 year

**Entry Qualifications**
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L | O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



# World Class British Degree @ICBT Jaffna Campus

Apply now for New Intake 2017

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

## ICBT HND QUANTITY SURVEYING

TVEC REGISTERED

**» Entry Qualifications**
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

**» Duration: 2 Years**

**Why Study ICBT ?**
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

## BSc (Hons) Quantity Surveying

**» Entry Qualifications**
- HND or Equivalent Qualifications Acceptable to the University
- Progression Routes for NDT, NDES(Civil), C&G (Civil), NCT(Civil / QS)

UGC RECOGNIZED

» Duration: 1 Year

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்



# ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர்களிடையே மோதல் பொலிஸ்,கடற்படையைச் சேர்ந்த இருவருக்கு மறியல்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் பிரதானி மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட இருவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு - மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் அண்மையில் நடைபெற்ற விருந்து உபசார மொன்றின் போது, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், கடற்படை உத்தியோகத்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த இருவரையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 7ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விருந்து உபசாரமொன்றின் போது, சந்தேகநபர்கள் மதுபோதையில் பாடல் பாடிக் கொண்டிருந்தனர் எனவும், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பாடல் பாடுவதனை நிறுத்துமாறு கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது ஆத்திரமடைந்த குறித்த இருவரும் கதிரை ஒன்றை எடுத்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சமந்த ஜயசுந்தரவை தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஆசிரி நுவான் செனவிரட்ன மற்றும் கடற்படை உத்தியோகத்தர் என்.முத்துநாயக்க ஆகியோரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)




ஐக்கிய மதங்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 4ஆவது மாநாடு யாழ். ராஜா கிறீம் ஹவுஸ் ஹம்சியா மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இம் மாநாட்டில் சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரனுக்கு ஐக்கிய மதங்களிற்கான சமாதான சேவை விருதை யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜன் வழங்கினார்.


## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

**பெறுகைக்கான அழைப்பு**

**நந்தவனம் பாதுகாப்பு இல்லம் கிளிநொச்சிக்கான புதிய உலர் உணவுப் பொருட்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகமும் - 2017/2018**

1.வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகை குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவுப் பொருட்கள், சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வரும் நிறுவனங்களுக்குக் கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | நிறுவனங்கள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01. | NP/30/02/Acc-05/Food/-2016-03 | நந்தவனம் பாதுகாப்பு இல்லம் - கிளிநொச்சி | 50,000 |

2.கேள்வி மனு பெறுகைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும்
காலம் :- 25.10.2017 தொடக்கம் 08.11.2017
நேரம் :- மு.ப 09.00 - பி.ப 15.00

3.விலைக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 10.11.2017 மு.ப 10.30 மணி

4.தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 021 222 8321, 021 205 7102) தொலைநகல் 021-205-7103

தி. விஸ்வரூபன்
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,
மீனாட்சி அம்மன் வீதி,
பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி-151)


## வயலில் கிடந்த் குண்டு



(கொழும்பு)

அம்பலன் தோட்டை - வாதுருப்பு பகுதியிலுள்ள வயல் காணியில் இருந்து குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காணியில் பெக்கோ இயந்திரத்தைப் பயன்படுத்தி நேற்றுக் காலை மண்ணை தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட போதே குறித்த குண்டு கைப்பற்றப்பட்டுள்ளது. (இ-7)


### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சிங்கராசா பத்மநாதன்**



பிறப்பு 24.08.1941 இறப்பு 04.11.2016

ஆண்டொன்று மறைந்தாலும்
அன்போடும் பண்போடும் நாம்
வாழ வழிகாட்டிய
எமது அருமை அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

உங்கள் நினைவுகளுடன்
நவாலி பிள்ளைகள்-குமுதினி, சுஜீவன், முகுந்தன்

(1109)


## இராசி பலன்

24.10.2017
ஐப்பசி 07, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சதுர்த்தி காலை 6.18 மணிவரை
கேட்டை மாலை 5.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
உலக ஐக்கிய நாடுகள் தினம்,
ஸ்கந்த பஞ்சமி

வளவன்

**மேடம்:** எடுத்த காரியத்தில் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நாள், வேலையில் புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், பிரயாண பயமுண்டு.

**இடபம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், செய் தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய சித்தியுண்டு.

**மிதுனம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பகைவர்கள் விலகுவர்.

**கடகம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, வியாபாரத்தை விரிபுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிறருக்கு உதவும் எண்ணம் தோன்றும், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**சிம்மம்:** செய் தொழிலில் சிறப்புகள் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சுபகாரியச் செலவுகளில் அக்கறை காட்டுவீர்கள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** வேலைச்சுமை கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு:** தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**மகரம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், காரிய நன்மையுண்டு, தொழில் வளர்ச்சியுண்டு, பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மீனம்:** எதிர்கால நலன்கருதி புதிய முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி, கார்த்திகை மாலை 5.43 மணிக்கு தனு-சந் | | ராகு |
| கேது | | | |
| | சனி சந் | சூரி,குரு புத | செவ் சுக் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்பு முறைத் தேர்தலாகவே உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும்

## எல்லை நிர்ணய குழுவின் தலைவர் வலம்புரிக்குத் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் விகிதாசாரம் மற்றும் தொகுதிவாரி இணைந்த ஐம்பதுக்கு ஐம்பது என்ற கலப்பு முறை தேர்தலாகவே நடைபெறும் என மாகாண சபைகள் எல்லை நிர்ணய குழுவின் தலைவர் கலாநிதி கனகரத்தினம் தவலிங்கம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் முறைமை மற்றும் மாகாண சபைகள் தேர்தல் முறைமைகள் தொடர்பில் வலம்புரிக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் எல்லை மீள் நிர்ணயம் பிரதேச சபைகளை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விகிதாசார முறைமையின் மூலம் எவ்வாறு ஒவ்வொரு மாகாணத்திற்குமான தேர்தல் தொகுதிகளுக்கு உறுப்பினர் எண்ணிக்கையை தீர்மானிப்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. இறுதியாக நடைபெற்ற பொதுசன கணிப்பின் படி ஒவ்வொரு 40 ஆயிரம் மக்கள் தொகைக்கும் ஒரு உறுப்பினர்கள் எனவும், நிலப்பரப்பு ரீதியாக ஒவ்வொரு 1000 சதுர கிலோ மீற்றருக்கும் ஒரு உறுப்பினர்களும் என்றுதான் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் ஒவ்வொரு மாகாணத்திற்குரிய உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சனத்தொகை அடிப்படையில் 371 உறுப்பினர்களும் பரப்பு அடிப்படையில் 66 உறுப்பினர்களுமாக சேர்க்கப்பட்டு 437 உறுப்பினர்கள் அகில இலங்கை ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இதனை விட ஒவ்வொரு மாகாணத்திற்கும் போனஸ் ஆசனப்படி ஒன்பது மாகாணங்களுக்கும் 18 ஆசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆகவே மொத்தமாக 455 உறுப்பினர்கள் இலங்கை முழுவதும் மாகாண சபைகள் தேர்தலுக்கு தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்கள்.

வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்திற்கு ஒரு தொகுதியும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு இரண்டு தொகுதியும், மன்னார் மாவட்டத்திற்கு மூன்று தொகுதியும், வவுனியா மாவட்டத்திற்கு மூன்று தொகுதியும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மூன்று தொகுதியும் என பிரிக்கப்படவுள்ளது. வடக்கு மாகாணத்தின் சனத்தொகை தற்போது குறைவடைந்துள்ள நிலையில் இந்த கலப்பு தேர்தல் முறையின் மூலம் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைவடையப் போவதில்லை. கொழும்பில் ஒரு இலட்சம் மக்களுக்கு ஒரு மக்கள் பிரதிநிதி இருப்பார். அதே நேரம் மன்னாரில் 33 ஆயிரம் மக்களுக்கு ஒரு மக்கள் பிரதிநிதி வருகின்றார். இது வடக்கு மாகாணத்திற்கு கிடைத்த வாய்ப்பு.

எனினும் உள்ளூராட்சி மன்றங்களை கொண்டு எல்லை நிர்ணயம் செய்ய முடியாது. உள்ளூராட்சி மன்ற எல்லைகள் முறையற்ற விதத்தில் பிரிக்கப்பட்டமையால் ஒரு உறுப்பினருக்கான மக்களுடைய எண்ணிக்கை வெவ்வேறு இடங்களில் வேறுபட்டு காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு நிலையிலேயே பிரதேச செயலகங்களை அடிப்படையாகக்கொண்டு எல்லை நிர்ணயங்களை செய்ய திட்டமிட்டுள்ளோம். ஒரு தொகுதிக்கு 72 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சராசரியாக இருக்க வேண்டும். பிரதேச செயலகங்களை அடிப்படையாக கொண்டு எல்லை நிர்ணயம் செய்யவுள்ளோம்.

இது தொடர்பில் பொது மக்களிடமும் கருத்துக்கள் கேட்கவுள்ளோம். இதற்காக ஒரு குழு அமைத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று மக்கள் கருத்துக்களை அறிவோம். எனினும் பாராளுமன்ற தேர்தல் விகிதாசார முறையிலா, தொகுதி முறையிலா அல்லது இரண்டும் இணைந்த முறையிலா என்பது தொடர்பில் தீர்மானிக்கவில்லை.

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான விண்ணப்பத்தின் போது இரண்டு விண்ணப்பங்கள் செய்ய வேண்டும். பட்டியல் அடிப்படையில் யார் தெரிவு செய்யப்படப் போகின்றார்கள் அடுத்து வட்டார ரீதியாக தெரிவு செய்யப்பட போவர்கள் பற்றி. இவ்வாறு பல நன்மைகளை அடிப்படையாகக் கொண்டே புதிய தேர்தல் முறைமை அமைந்துள்ளது. எனினும் இதன் போது கட்சி ஒன்றில் போட்டியிடும் உறுப்பினர்கள் தோற்றாலும் கட்சிக்குக் கிடைத்த வாக்கின் எண்ணிக்கை விகிதாசாரத்தை அடிப்படையாக கொண்டு தேர்தலில் தோற்ற உறுப்பினர் கட்சி விரும்பும் பட்சத்தில் உறுப்பினராக வரமுடியும். இதே போன்று தான் ஒரு தொகுதியில் மக்களால் நிராகரிக்கப்படுபவர் இன்னொரு தொகுதியில் உறுப்பினராக வரக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. இது தொடர்பில் அந்த கட்சிகளே பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

வேட்பாளர்கள் தெரிவு தொடர்பில் கட்சிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

### தமிழ் அரசியல் கைதி சதீஸின்

## ‘சிறையில் இருந்து சிங்கள சகோதரனுக்கு’ நூல் வெளியீடும் கவனயீர்ப்பு போராட்டமும்







(யாழ்ப்பாணம்)

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, தமிழ் அரசியல் கைதியாக மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விவேகானந்தனூர் சதீஸின் "சிறைக்குள் இருந்து சிங்கள சகோதரனுக்கு" நூல் வெளியீடும் விடியலைத் தேடும் இரவுகள் நூல் அறிமுகமும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்றது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வரவேற்பு உரையினை சமூக ஆர்வலர் கொட்டடிக் கோமகன் நிகழ்த்த நூல் வெளியீட்டு உரை, ஆய்வுரை மற்றும் கருத்துரைகளை இலக்கியப் படைப்பாளிகளான கை.சரவணன், அஜந்தகுமார், சித்ராதர் ஆகியோர் நிகழ்த்தினர்.

முதன்மை மற்றும் சிறப்புப் பிரதிகளை நூலாசிரியரின் தாயாரான திருமதி செ.மகேஸ்வரி வெளியிட்டு வழங்க யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, படைப்பாளிகள் உலகம் அமைப்பின் நிறுவுநர் ஐங்கரன் கதிர்காம நாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இறுதியாக நூலாசிரியரின் மகள் காவியா நன்றியுரையாற்றினார்.

நூல் வெளியீட்டு விழா முடிவடைந்த பின்னர், நிகழ்வில் பங்குபற்றிய யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் அனைவரும் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதியில் இறங்கி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"விடுதலை செய் விடுதலை செய் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்" என்ற கோஷத்துடன் 10 நிமிடங்கள் வரை இப் போராட்டம் இடம்பெற்றது. (இ-9-312)

## புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் 2.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் உரும்பிராய் மேற்கு அன்னுங்கை இளைஞர் சனசமூக நிலைய புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். (இ-10)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மினின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து யாழ்.அராலி இணையும் கரங்கள் சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் சனசமூக நிலையத்தினரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

( படம்:-பாசையூர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "கம்பவாரிதி" இ.ஜெயராஜ் அவர்களை அகவை 60இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



## பாரெங்கும் பரவுபுகழ் பைந்தமிழ் வாரிதிக்கு பல்லாண்டு கூறுதுமே!

அன்னைத் தமிழேயெம் ஆரணங்கே அகமகிழ்வாய்!
அரியதமிழ் மக்காள்நீர் அன்பைச் சொல்வீர்!
பொன்னைப் பொருளைப் போகத்தைப் புறந்தள்ளி
புகழ்கம்பன் பொழிதமிழைப் போற்றி மண்ணில்
இன்னல்கள் சூழ்ந்தாலும் இடர்பலவாய் வந்தாலும்
இதுவேயென் வழியென்று இறுக்கம் நாட்டி
கன்னற் தமிழ்ப்பெருமை காசினிக்குக் காட்டுமன்பன்
கண்டனனாம் மணிவிழவு - கவின்நூ றாண்டே!

கம்பன் கழகத்தைக் கருச்சுமந்து பெற்றமகன்
கண்ணையிமை காப்பதுபோல் கழகம் காப்போன்!
எம்மண் நிமிர்ந்திலங்க ஏற்றமிகு அறம்பொழிவோன்!
எந்தவிடர் சூழ்ந்தாலும் இரும்பாம் நெஞ்சன்!
சிம்மம் எனநின்று சீறியறப் பிறழ்வுகளைச்
சிதைக்கச் சிலைவளைப்போன் சீரார் செல்வன்
கம்பவா ரிதியெங்கள் கலைவல்லான் காசினியில்
கம்பனவன் அருள்கொண்டு பலநூ றாண்டே!

நாற்பாத வழிபாட்டின் நயங்காட்ட தலைநகரில்
நல்லதொரு கலைக்கோயில் நாட்டும் அன்பன்
ஏற்றாரும் ஏற்காரும் எல்லோரும் வாழவென
இதயத்தால் வழுத்தியுழும் இரக்க நெஞ்சன்
காற்றாகிக் கனலாகி கருதுமறப் புயலாகி
காதகங்கள் கலங்கிவிழக் கணைகள் எய்வோன்
மாற்றாரும் வாழவென மனத்தால் துதிசெய்யும்
மன்னன் மாநிலத்தில் பலநூ றாண்டே!

நல்லை நகர் நாவலரின் நற்பணிக்குப் பின்னாலே
நம்நாட்டின் பெருமைதமிழ் நாட்டில் வைப்போன்
சொல்லுதமிழ் நாட்டரசின் சுந்தரமாம் விருதுகளை
சொந்தமென ஆக்கியெங்கள் சுயத்தை வென்றோன்
வெல்லுதமிழ் நாட்டறிஞர் விஞ்சுசபை மீதேறி
வெற்றிக்கொடி நாட்டியெங்கள் வீரம் சொல்வோன்
ஒல்லும் உயர்வகையால் உற்றானறு பானாண்டு
ஒளிமயமாய் உத்தமனும் பலநூ றாண்டே!

அப்பன் கம்பனுக்கும் அரியதமிழ் மங்கைக்கும்
ஆனபணி நேர்த்தியாய் ஆற்றுவீரேல்
செப்பமாய் எனக்குவிழாச் செய்தமைக்கு நிகராகும்
செய்வீர் அக்கடமையெனச் செப்பியின்று
ஒப்பிலா விழாவெடுக்க ஒருசொல்லால் தடைபோட்டான்
ஒருபோதும் பகட்டுகளை உவக்கா மன்னன்
உப்புளவாங் கடல்சூழ்ந்த உலகம்வாழ் தமிழரெல்லாம்
உயர்கம்ப வாரிதிக்கு நிறைத்தோம் வாழ்த்து

கோயில் தலங்களெல்லாம் குலவு தமிழ்பொழிந்தான்
குலக்கவிஞன் கம்பனுக்கு விழாக்கள் கண்டான்
தாயாம் தமிழ்நாட்டின் தரமார் அறிஞர்கள் முன்
தமிழ்பொழிந்து ஈழவரெம் நிமிர்வு சொன்னான்
ஆயும் சித்தாந்த அறிவின் திறன்கொண்டு
அரியதமிழ் நாட்டினிலே விருது பெற்றான்
பாயும் தமிழ்வெள்ளம் பரவியுல கெங்கணுமே
பசுமைகொளச் செய்வார்க்குப் பலநூறாண்டே!

ஏற்றதொரு கருத்தாயின் எடுத்துரைக்க என்றைக்கும்
எவருக்கும் எப்போதும் அஞ்சா நெஞ்சன்!
சாற்றுதமிழ் பேச்சுக்குச் சரித்திரமே வரைந்தமகன்
சங்கையிலார் புகழ்பாடிச் சரியா மைந்தன்
போற்றலொடு தூற்றல்கள் போகங்கள் எவைவரினும்
பொறித்தநற் கொள்கைவழிப் போகும்செல்வன்
ஆற்றலுறு கம்பவா ரிதியிலங்கை ஜெயராஜ்சும்
அகவையறு பதுகண்டான் அண்ணன் வாழ்க!

கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ்காக்கும்
கழகப் பிதாமகன் வாழ்க! - வாழ்க!
தம்பிப் படையொன்றைத் தமிழின் புகழ்காக்கத்
தந்த தலைவ நீ வாழ்க! - வாழ்க!
நம்புஸ்ரீ ராமன் நவையில் ஆஞ்சனேயன்
நல்ல அருள்கொண்டு வாழ்க! - வாழ்க!
இம்பர் வாழ்வோங்கி இனிய நூறாண்டு
இளமை நலங்கொஞ்ச வாழ்க! வாழ்க!

தமிழால் நீர் வாழ்ந்தீர்!
தமிழ் உம்மால் வாழ்கிறது!
நாம் உம்தமிழால் உயர்ந்து வாழ்கிறோம்!
உயர் வாழ்ந்து ஈந்து மகிழ்கிறோம்.

**வாழ்த்தி - வணங்கி - ஆசி வேண்டுவோர் -**
**யாழுக இலக்கிய உறவுகள்**

## வாழிய வாதிரியார்

இனித்த சொல்லும் இளகிய மனமும்
பெருத்த மெய்யும் பெற்றவர் வாரிதியார்
நினைக்கும் நினைப்புகளில் நிமிர்வுகளைப் பதியிட்டு
நிகழ்த்திக் காட்டலிலும் வல்லவர் வாரிதியார்

கந்த புராணக் கலாசார யாழ் மண்ணில்
கம்பனையும் பயிலவைத்துக் கவின் செய்தார் வாரிதியார்
வந்த கூட்டத்தின் வகைதொகையைக் கிரகித்து
வழங்கும் சொற்பொழிவால் வசியமிடும் வாதிரியார்

இந்த நூற்றாண்டில் எங்கள் இனிய மண்ணில்
இலக்கியத்தை ஏற்றுவதில் வெற்றிபெற்ற தமிழ்வல்லார்
கம்பன் கழகங்களை ஆங்காங்கே உண்டாக்கி
கன்னித் தமிழ்த்தாய்க்குக் காணிக்கை செலுத்துபவர்

இம்பரை உம்பராக்கும் எழில்மிகு சொற்களினால்
இன்னமுதை எங்கெங்கும் படைத்தளித்துப் பயன்கொள்வார்
இன்றைக்கு (24.10.2014) அவருக்கு வயது அறுபதென்ற
நாளின் கணக்கை நம்பித்தான் ஆகவேண்டும்

என்றைக்கும் இவர்பணிகள் இலங்கிப் பெருக்குற்று
எம் மண்ணின் ஆளுமையை மேலும் பரப்ப வேண்டும்
நாவலர்கள் வித்தகர்கள் வாழ்ந்துவந்த யாழ்ப்பாணம்
ஆர்வம் பெய்பவரால் அகமகிழ்ந்து உயரவேண்டும்

நாளும் வள்ளுவரைப் பயில்கின்ற வாரிதியின்
வாழ்வும் வளப்பெயரும் வரப்பிகந்து பரவவேண்டும்
தமிழுக்கு இழுக்கெனின் நாணமுறும் வாதிரியால்
தமிழ்ப்பயிலும் விளைவுற்றுத் தரணியெங்கும்
செழிக்க வேண்டும்

பெருக்கும் பேச்சுப்போல் சுரக்கும் எழுத்துக்களை
உகரத்தின் (www.uharam.com)
வழியேனும் உலகிற்கு அளிக்க வேண்டும்
அழியா அழகெங்கும் அகலித்துக் கிளைபரப்பி
ஆற்றலால் தளிர்ப்பெய்த உம்மைச் சரணடைந்தோம்

வாழிய வாரிதியார் வாழ்க பல்லாண்டுகள்
வாழும் தமிழென வளமைகள் பொங்கவே

**வாழ்த்திமகிழ்பவர்**
**தென்மராட்சி இலக்கிய அணியினர்**

## கம்பவாரிதிக்கு உள்ளம் உவக்கும் நல்வாழ்த்துக்கள்

இன்று மணிவிழாக்காணும் செந்தமிழ் காவலர்
சித்தாந்த கலாநிதி, கம்பவாதிரி, உயர்திரு
இ.ஜெயராஜ் ஐயா அவர்கட்கு இறையாசி பொலிந்து
இனிய தமிழ்ப் பணி தொடர உள்ளம் உவந்த
பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்கின்றேன். "வாழ்க வளமுடன்"

**சி.சிறீதரன் - யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்**

## அண்ணலின் அகவை அறுபது

உலகம் உவப்ப உயர்ந்த பலதை
உளத்தில் கொண்டு நடப்பவரை
பலதும் பயின்ற பண்டிதரை
பழகும் இனிய பண்பினரை
திலகம் திகழும் திருமுகமும்
திடமாய் எண்ணும் பெருமிதமும்
நிலவும் நிகழ்வு நிமிர்வெய்த
நெடிதாய் உழைப்பவர் ஜெயா அண்ணல்

கம்பன் கழகம் கவின்கொள்ள
கடமை பலதும் ஆற்றுபவர்
வம்பு வழக்குகள் வரும்போதும்
வகையாய் வாதம் இயற்றுபவர்
தம்முன் தவழும் தம்பியரின்
தலைமைப் பண்பை உயர்த்துபவர்
எம்முன் எழில்கள் எடுக்கின்ற
எளிமைக் குணத்தர் ஜெயா அண்ணல்

படித்த படிப்பைப் பயனுள்ளதாய்ப்
பலவாய்ப் பகிரும் பண்புடையர்
வடித்த வகையில் வதனத்தில்
வளங்கள் வழங்கும் வண்மையினர்
பிடித்த பிடியில் பிரமிக்கும்
பெருமைக் குணங்கள் பல சேர்த்து
முடித்த முயற்சிகள் முடிவிலதாய்
முகிழ்த்திச் சிறந்தவர் ஜெயா அண்ணல்

அன்பே அறமும் அழகுமென
அருகில் இருப்போர்க் கருளுபவர்
பண்பும் பயனும் பரவுவதே
பரமனைப் பயிலும் வழியென்பர்
இன்பும் இனிமையும் இவ்வுலகில்
இருந்தும் செயல்களை வகுத்தாற்றி
நன்றும் நலமும் நல்லவற்கு
நடக்க முயல்பவர் ஜெயா அண்ணல்

இலக்கிய இயம்பலில் இன்னமுதை
இனிக்கக் குழைத்து ஊட்டுபவர்
கலக்கம் கலவாக் கடமையுடன்
கவிதை உலகைக் காட்டுபவர்
நிலத்தில் நிமிரும் நிகழ்காலம்
நிகழ்த்திய அகவை அறுபதென
உளத்தில் உவந்து உயராயுள்
உறுதியாய் வாழ்கென வாழ்த்துவமே

**ச.மார்க்கண்டு,**
**பெரியமாவடி, சாவகச்சேரி**

(C-147)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளம் வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்படும்
# வெளிநோயாளர் பிரிவு விரைவில் திறக்கப்படும்
## வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாங்குளம் வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வெளி நோயாளர் பிரிவு மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், மாங்குளம் வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவு தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் கட்டுமானப்பணிகள் இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் நிறைவடையவுள்ளது. வடக்கு மாகாணத்தின் எயிட்ஸ், சயரோகம், மலேரியா, காசநோய், போன்ற நோய்களை அழித்தொழிப்பதற்கான உலக நிதியத்தின் கருத்திட்டத்தின் கீழ் கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு மாகாணத்தில் 68 புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் இறுதியாக அமைக்கப்பட்டு வருகின்ற கட்டடமான மாங்குளம் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு அமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் 29 வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவுகளும் 12 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் 15 சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கான விடுதிகளும் 5 மலேரியாத்தடுப்பு பணிமனைகளும் 3 காசநோய் மற்றும் மார்பகச்சிகிச்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்காக ஆயிரத்து 824 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாக அவர் குறிபபிட்டுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் மருத்துவத் தேவைகளைக் கருதி மல்லாவி பிரதேச வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு பிர தேச வைத்தியசாலைஎன்பன ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்துவதுடன், ஆதார வைத்தியசாலையாக இருக் கின்ற மாங்குளம் வைத்தியசாலை நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்திற்கான புனர் வாழ்வு வைத்தியசாலை யாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்கான அனுமதிகள் கிடைக்கப் பெற்று வேலைகள். ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். (2-315)

# வவுனியா பசங்க அமைப்பினர் மாபெரும் சிரமதானப் பணியில்



(குருமன்காடு)

"பார்த்தினீயம் அற்ற வவுனியாவை உருவாக்கு வோம்" எனும் செயற்றிட்ட த்தின் கீழ் "வவுனியா பசங்க" அமைப்பினரால் வவுனியா வைரவப் புளிங்குளம் சிறுவர் பூங்கா வீதி, நகரசபை ஊழியர் விடுதி வீதி என்பற்றில் வவுனியா நகர சபையின் அனுசரணையுடன் மாபெரும் சிரமதானப் பணி நேற்று முன்னெடுக்க ப்பட்டது.

தற் போது வவுனியா நகரில் பார்த்தினீயம் அதிகரித்து காணப்படும் இந் நிலையில் வவுனியா மாவட்ட இளைஞர்களினால் உருவாக்கப்பட்ட "வவுனியா பசங்க" அமைப்பினர் இவ்வாறான சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (2-250)

# உடைப்பெடுத்து புனரமைக்கப்படாதுள்ள குளத்தை புனரமைத்துத் தாருங்கள்
## முறிகண்டி இந்துபுரம் விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள நீண்ட காலமாக உடைப்பெடுத்து புனரமைக்கப்படாது இருக்கின்ற குளத்தைப் புனரமைத்துத் தருமாறு முறிகண்டி இந்து புரம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



முறிகண்டிக்குளத்தின் கீழ் உள்ள 132 ஏக்கர் வயல் நிலங்களிலும் குறிப்பிட்ட பகுதி இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

இப்பகுதியில் தற்போது வயல் நிலங்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றபோதும் குளம் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகி ன்றது.

முறிகண்டி, இந்துபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் இக்குளத்தின் கீழ் உள்ள வயல் நிலங்களில் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

கடந்த 2009ஆம் ஆண்டு மக்கள் இடம் பெயர்ந்ததையடுத்து 2012ஆம் ஆண்டு வரைக்கும் இப்பகுதி வயல் நிலங்கள் படையினர் வசமிருந்து பின்னர் விடுவிக்கப் பட்டிருந்தன.

ஆனால், உடைப்பெடுத்த குளம் இதுவரை புனரமைக்கப்படாது கைவிடப்படாது நிலையில் காணப்படுகின்றது. எனவே குறித்த குளத்தை புனரமைத்துத் தருமாறும் இதன் மூலம் இந்த வயல் நிலங்களை சீர்செய்து பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும் என இப்பகுதி விவசாயிகள்தெரிவித்துள்ளனர். (2-315)

# தொழிற் பயிற்சிநெறிகள் ஆரம்பம்

(மல்லைத்தீவு)

இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் NVQ மட்டத்திலான முழுநேர மற்றும் பகுதிநேர தொழில் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. இதன் பிரகாரம் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன என அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவற்றுக்கான கற்கை நெறிகளாவன, தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், இரு சக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர். தையல், வெதுப்புநர், அழகுக்கலையும் சிகை அலங்காரமும், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் வாகனம் திருத்துநர் ஆகும்.

இக்கற்கை நெறிகள் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், பாலிநகர், புதுக்குடியிருப்பு ஆகிய தொழில் பயிற்சி நிலையங்களில் நடைபெறுகின்றன.

இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்ககள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், நீதிமன்ற வீதி, மாங்குளம் பிரதான வீதி, முல்லைத்தீவு அல்லது பாலிநகர் தொழில் பயிற்சி நிலையம், மாந்தை கிழக்கு, முல்லைத்தீவு அல்லது ஒட்டுசுட்டான் தொழில் பயிற்சி நிலையம், 14 ஆம் கட்டை, மாங்குளம் வீதி, முல்லைத்தீவு என்னும் முகவரிகளில் 2017.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் பயிற்சி நெறிகள் யாவும் இலவசம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு முல்லைத்தீவு-(077 735 9505, 0710318989), ஒட்டுசுட்டான்-(071 031 8991), பாலிநகர்-(071 031 8990) ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# 2 கிலோ கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைதானார்

(குருமன்காடு)

வவுனியா, பேருந்து நிலையத்தில் 2 கிலோ 136 கிராம் கேரள கஞ்சாவுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை வவுனியா மது ஒழிப்பு பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.



நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

யாழில் இருந்து கண்டி நோக்கிச் செல்லும் பேருந்தில் பயணித்த இளைஞன் ஒருவரின் செயற்பாட்டில் சந்தேகம் அடைந்த வவுனியா மது ஒழிப்பு பிரிவுப் பொலிஸார் வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து குறித்த இளைஞனின் பொதியைச் சோதனை செய்த போது அதில் 2 கிலோ 136 கிராம் கேரளக் கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து கஞ்சா கைப்பற்றப் பட்டதுடன் பிரஸ்தாப இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.பண்டத்தரிப்பைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வவுனியா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த கஞ்சா இந்தியாவின் தெலுங்கு செய்தித்தாள் ஒன்றி னால் பொதி செய்யப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற இருவரும் விளக்கமறியலில்

(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் சட்டவிரோதமாக வாகனத்தில் முதிரை மரக் குற்றிகளைக்கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப்பொலிஸ்மா அதிபரின் நெறிப்படுத்தலில் விசேட மது ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது, கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு வாகனம் ஒன்றில் விசுவமடுவிலிருந்து தருமபுரம் நோக்கி எடுத்து வரப்பட்ட முதிரை மரக்குற்றிகளை கைப்பற்றியதுடன், வாகனத்தைச் செலுத்திச்சென்ற சாரதியையும் மற்றுமொருவரையும் கைதுசெய்த பொலிஸார் கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் எஸ்.சிவபால சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது. (2-315)










கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா அண்மையில் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது. பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் [illegible] நிகழ்வில் மாகாண மற்றும் தேசிய ரீதியில் பாடசாலை மட்டங்களில் வெற்றிபெற்ற கலை நிகழ்வுகள் அரங்கேறின.
(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதி தலைவர்களினாலேயே
# பிரபாகரன் தனித்தமிழீழம் கோரி போராட்டம் நடத்தும் நிலை ஏற்பட்டது
## அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

(குருமன்காடு)

மொழிக் கொள்கை, தரப்படுத்தல் போன்ற பாரபட்ச நடைமுறைகளை தென்பகுதி பெரும்பான்மையின தலைவர்கள் கொண்டு வந்ததனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். புலிகளின் தலைவர் பிரபாகரன் தனித் தமிழீழம் கோரி பாரிய எழுச்சிப் போராட்டத்தை நடத்தும் அளவுக்கு நிலைமை மாறி இருந்தது என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.



வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற இரத்தின தீப விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பெரும்பான்மையின அரசியல் தலைமைகள் விட்ட தவறுகளும் அவர்களின் செயற்பாடுகளுமே இந்த நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரழிவுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணம். இந்த நிலையை மேலும் மோசமாக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடாது.

மொழிக் கொள்கை, தரப்படுத்தல் போன்ற பாரபட்ச நடைமுறைகளை அவர்கள் கொண்டு வந்ததனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். புலிகளின் தலைவர் பிரபாகரன் தனித் தமிழீழம் கோரி பாரிய எழுச்சிப் போராட்டத்தை நடத்தும் அளவுக்கு நிலைமை மாறி இருந்தது. அதன் பின்னர் முஸ்லிம்களுக்கென தனிக்கட்சி அமைத்து மர்ஹூம் அஷ்ரப் தமது சமூக உரிமை காக்க போராடினார். இவைகள் கடந்த கால வரலாறு.

இனங்களுக்கிடையேயும் மதங்களுக்கிடையேயும் ஏற்பட்ட பிரச்சினைகளும் சந்தேகங்களுமே இன்று நமது நாடு அகதிகளைச் சுமக்கும் நாடாக, அகதிகளை உருவாக்கும் நாடாக, அகதிகளை ஏற்றுமதி செய்யும் நாடாக, துன்ப துயரங்களை சுமந்து வேதனையில் தத்தளிக்கும் நாடாக மாறியமைக்கு பிரதான காரணம். இதனால்தான் காணாமல் போனோரின் உறவினர்கள் வீதிகளில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி கண்ணீருடன் அலைந்து திரியும் காட்சியும், சிறைக் கைதிகளை விடுவிக்குமாறு நடக்கும் ஜனநாயக போராட்டங்களும் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறானவற்றுக்கு நாங்கள் முடிவு கட்ட வேண்டாமா? இந்த நாட்டில் அனைத்து இனங்களும் நிம்மதியாக வாழ வேண்டாமா? நமது நாட்டிலே சமாதானமும் நல்லுறவும் தழைக்க ஊடகவியலாளர்களின் பங்கே காத்திரமாக அமைகின்றது என கூறினார். (2-250)

# போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் அழகுக்கலையும் சிகை அலங்காரமும் (Beautician & Hair Stylist), அலுமினியம் பொருத்துநர் (Aluminium Fabricator), தையலாளர் (Tailor) மற்றும் மோட்டார் வாகன திருத்துநர் (Auto mobile mechanic) போன்ற தமிழ்மொழி மூலமான பயிற்சிநெறிகளுக்கு போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பூரணப்படுத்தப்பட்ட சுய விபர படிவத்துடன் தமது சான்றிதழ்களின் பிரதியையும் இணைத்து 2017.10. 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக் குமாறு அவர் கேட்டுள்ளார்.

விண்ணப்பதாரிகளின் தகைமைகளாக,

குறித்த தொழிற்பயிற்சிப் பிரிவில் NVQ 4 மட்டம் அல்லது அதற்கு மேலான தொழிற் தகைமை பெற்றிருத்தல், தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல், வயதெல்லை 18 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை உதவிப்பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், நீதிமன்ற வீதி, மாங்குளம் பிரதான வீதி, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# வாள்வெட்டு, அச்சுறுத்தல் தொடர்பில் 6 பேர் கைது

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக் குளம் பகுதியில் கடந்த 19ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவம் மற்றும் அச்சுறுத்தல் விளைவித்தமை தொடர்பில் ஆறு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக் குளம் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு இளைஞர்கள் சிலர் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடுகளை துணியால் மறைத்து கட்டிவிட்டு வீதியில் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன், வியாபார நிலையம் ஒன்றையும் சேதப் படுத்தியிருந்தனர். இச்சம்பவத்தில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் இதுவரை இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் அடிப்படையில் ஆறு பேரை கைது செய்து நீதி மன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)




# தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது



(பரந்தன்)

வடக்கு மாகாணத்திலுள்ள மாற்றுவலுவுள்ளோருக்கான தொழிற்பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.


சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் சமூக சேவைகள் திணைக்களத்தினால் வடக்கு மாகாணத்திலுள்ள மாற்றுவலுவுள்ளோருக்காக அமைக்கப்படவுள்ள இப்பயிற்சி நிலைய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சமூக சேவைகள். நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் மேலதிக செயலாளரும் சமூக சேவைகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான பிரதீப் ஜசரட்ண இப்பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், 80 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படும் இப் பயிற்சி நிலையத்தில் 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. 15 வயதிலிருந்து 38 வயதுவரையுள்ள மாற்றுவலுவுள்ளோருக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படும். இப் பயிற்சியின் போது அவர்களுக்கான உணவு, உடை, தங்குமிட வசதி, ஊக்குவிப்பு தொகை என்பன வழங்கப்படும் என சமூக சேவைகள். நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் பிரதீப் ஜசரட்ண தனது உரையில் தெரிவித்தார். (2-312)

(2-25

# உரிமை கோருவதை நிறுத்துங்கள் இது மக்கள் போராட்டம்
## கேப்பாப்பிலவு மக்கள் தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களின் நிலமீட்பு போராட்டம் எட்டு மாதங்களைக் கடந்து தொடருகின்ற நிலையில் தமது போராட்டத்தை அரசியல் கட்சியொன்று தாமே நடத்துவதாக உரிமை கோருவதை நிறுத்துமாறு போராட்டக் கள மக்கள் தெரிவித்துள்ளனர்.

எமது போராட்டத்திற்கு உணவு உள்ளிட்ட உதவிகளை பல்வேறு மனிதாபிமான அமைப்புக்களும் கட்சிகளும் உதவி வருகின்றமை உண்மையே. நாம் எமது நிலத்திற்கான மீட்பு போராட்டத்தை ஆரம்பித்த பின்புதான் அரசியல் கட்சிகள் எம்மை நோக்கி வரத் தொடங்கின.

அதன்பிறகுதான் அவர்கள் எமக்கு உதவினர். எமது போராட்டத்தை எந்தக் கட்சியும் கட்சி சார்ந்த நபரும் தலைமை தாங்கவில்லை. இது ஒரு மக்கள் போராட்டம்.

இதை அரசியல் இலாபத்திற்காக எந்த கட்சியும் பயன்படுத்துவதை நாம் விரும்பவில்லை என கேப்பாப்பிலவு மக்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர். (2-281)

# கத்திக்குத்து சம்பவத்துக்கு பெண் பிரச்சினை காரணம்

(குருமன்காடு)

வவுனியாவில் நடைபெற்ற கத்திக்குத்து சம்பவத்திற்கு பெண் பிரச்சினையே காரணம் என வவுனியா பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வவுனியா குடியிருப்பு பகுதியில் கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற கத்திக்குத்தில் உயிரிழந்த ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்திற்கு பெண் தொடர்பான பிரச்சினையே காரணமாக இருந்ததாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த இ.தங்கராஜா (வயது 56) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதுடன், அருகிலுள்ள கடையில் கம்மாலை தொழில் செய்துவரும் 55 வயதுடைய நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்த வவுனியா பொலிஸார் கம்மாலை தொழில் செய்பவருடன் பெண்ணொருவர் அடிக்கடி வந்து கதைத்து செல்வதாகவும் அதனை அவதானித்த அருகிலுள்ள கடைக்காரர் பணம் கொடுத்து அந்தப் பெண்ணை வளைத்துப் போட்ட நிலையில், ஆத்திரமடைந்த சந்தேக நபர் அருகிலுள்ள கடைக்காரரை குத்திக் கொலை செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தெரிவித்தனர். (2-250)

# முதுசித்தம் சஞ்சிகை வெளியீடும் ஒன்றுகூடலும்

யாழ்.பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் வவுனியா நிலையத்தின் கல்வியியல் முதுமாணி மாணவர்களின் முதுசித்தம் சஞ்சிகை வெளியீடும் ஒன்றுகூடலும் வவுனியா, றோயல் காரடன் மண்டபத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் வவுனியா நிலையத்தில் கல்வி பயிலும் கல்வியியல் முதுமாணி கற்கைப் பீட நான்காவது அணி மாணவர்களால் இச் சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது.

கல்வியியல் முதுகலைமாணி மாணவர் மன்றத் தலைவர் ல.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இச் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-25 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.தீவிரவாதிகளுடன் இலங்கை வைத்தியர்கள்

## இந்திய வைத்தியரின் காணொலியில் திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

ஐ.எஸ். எனப்படும் இஸ்லாமிய தேசம் தீவிரவாதிகளுடன் இணைந்து இலங்கையைச் சேர்ந்த வைத்தியர்களும் பணியாற்றுவதாக, ஐ.எஸ். அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள காணொலி ஒன்றில் தகவல் வெளியாகியுள்ளது. ஐ.எஸ். தீவிரவாதிகளின் மருத்துவ வசதிகள் பற்றிய சுமார் 15 நிமிடக் காணொலி ஒன்று அந்த அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் காணொலியில் இந்தியாவைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் வைத்தியரான, அபு அல் முகாதில் என்பவர், ஐ.எஸ் அமைப்பின் மருத்துவ வசதிகள் தொடர்பாக உரையாற்றியுள்ளார்.

ரக்காவில் உள்ள ஐ.எஸ். அமைப்பில் மருத்துவ நிலையத்தில் மிக நவீன வசதிகள் இருப்பதை இந்தக்காணொலி வெளிப்படுத்தியுள்ளது. இங்கு இந்திய வைத்தியர் பணியாற்றுவதாக சந்தேகிக்கப்படுகிறது.

இலங்கை, அவுஸ்திரேலியா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளின் வைத்தியர்கள் இந்த மருத்துவ நிலையத்தில் பணியாற்றுவதாக, இந்திய வைத்தியர் காணொலியில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் உலகெங்கும் உள்ள வைத்திய நிபுணர்களை இஸ்லாமிய அமைப்புடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அதேவேளை, குறிப்பிட்ட இந்திய வைத்தியர் தென் மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று இந்திய புலனாய்வு அமைப்புகள் சந்தேகம் வெளியிட்டுள்ள தாக, இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)



## புதிய தூதுவர்கள் ஜனாதிபதியிடம் நியமனக் கடிதங்கள் கையளிப்பு





(கொழும்பு)

மூன்று புதிய தூதுவர்களும் இரண்டு உயர்ஸ்தானிகர்களும் கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமது நியமனக் கடிதங்களை கையளித்தனர்.

கனடா, ரஷ்யா, மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கான புதிய தூதுவர்களும் உயர்ஸ்தானிகர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

David Mckinnon - (கனடா உயர்ஸ் தானிகர்)

Yuri B Materiy - (ரஷ்ய தூதுவர்)

Mohamed Hussain Shareef -(மாலைதீவு தூதுவர்)

(Retd) Shahid Ahmed Hashmat -(பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர்)

Hussein EL Saharty- (எகிப்து தூதுவர்)

இதில் இலங்கைக்கும் புதிய தூதுவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய இருதரப்பு உறவுகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு கூட்டுறவை மேலும் பலப்படுத்த புதிய தூதுவர்கள் அர்ப்பணிப்புடன் உழைப்பார்கள் என நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கையின் மத்திமப் போக்குடைய வெளிநாட்டுக் கொள்கை அனைத்து நாடுகளுடனும் நட்புறவை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டதாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புதிய தூதுவர்கள் ஒரு முக்கியமான காலகட்டத்தில் இலங்கைக்கு வந்திருப்பதாகக் குறிப்பிட்ட பதில் வெளிவிவகார அமைச்சர் வசந்த சேனநாயக்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை சர்வதேச சமூகத்தின் உதவியையும் நல்லெண்ணத்தையும் வென்றுள்ளதாகவும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி அர்ப்பணிப்புடன் உழைத்து வருவதாகவும் தெரிவித்தார். நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகள், முதலீடு மற்றும் இருதரப்பு வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கு தற்போதைய சாதகமான சூழ்நிலையை புதிய தூதுவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகள் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பொதுச்சேவை ஆணைக்குழு தீர்மானங்களை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் அசமந்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதில், வடக்கு மாகாண அதிகாரிகள் அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக பாதிக்கப்பட்ட தரப்பினரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு புதிதாக 5 அதிகாரிகளை கொண்டு கடந்த ஆவணி மாதத்தில் இருந்துஇயங்குகிறது. இது ஆளுநரால் நியமிக்கப்பட்ட அதிகாரங்களை சரியான முறையில் உறுதிப்படுத்துவதை நோக்கமாக கொண்டு செயற்படுகிறது.

ஆளுநரால் வழங்கப்படும் மாகாண அரச சேவையின் ஊழியர் தர அதிகாரிகளின் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கை போன்றவற்றில் ஏற்படும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணை கள் மேற்கொண்டு தீர்மானங்களை அறிவிக்கும் சபையாக உள்ளது.

அந்த வகையில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் தரப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று தீர்மானம் எடுக்கப்பட்ட போதும், தமது குறைபாடுகளுக்கு தீர்வு காணப்படவில்லை என பாதிக்கப்பட்ட தரப்பினரால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இச் செயற்பாடு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தொடர்ந்தும் பாதிப்பை ஏற்படுத்துவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. நிறைவான அதிகாரம் கொண்ட சபையால் ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்டு நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் மாகாண சபை அதிகாரிகளால் அமுல்படுத்தப்பட வேண்டியது கட்டாயமானதாகும். ஆனால்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பல இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் அதாவது செயல்வடிவம் பெறாமல் இருப்பதாக தெரிய வருகிறது.

எனவே குறித்த தீர்மானங்களை அதிகாரிகள் உடனடியாக நிறைவேற்றி பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உதவ வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ-9)

## வடக்கிலும் நல்லவர்கள் உள்ளனர்

### ஆளுநர் கூரே தெரிவிப்பு

(கரணவாய்)

இந்த நாட்டில் சிங்கள மக்கள் மட்டுமே நல்வர்கள் என நாம் நினைத்து வந்தோம். ஆனால் வடக்கிலும் நல்ல மனிதர்கள் இருக்கின்றார்கள் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

களுத்துறை பயாகல இந்து வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்திராக கலந்து கொண்ட வட மாகாண ஆளுநர் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கிலும் தெற்கிலும் மனிதநேயமிக்க மனிதர்கள் இருக்கின்றார்கள். குறுகிய அரசியல் நோக்கமும் அதிக ஆசை பிடித்த தலைவர்களுமே இந்த மனிதநேயத்திற்கு வேட்டு வைக்கின்றனர். ஒரே நாடு ஒரே தேசம் என்று இருந்தால் ஒரு தலைவர் இருப்பார். ஆனால் நாடு சிறுதுண்டுகளாக இன ரீதியாகவும் மத ரீதியாகவும் பிரிக்கப்பட்டால் பல தலைவர்கள் இருப்பார்கள். சிறந்த தலைமைத்துவம் உருவாக பிணக்குகள் தீர்க்கப்பட வேண்டும். அவ்வாறு செய்பவர் சிறந்த தலைவராக உருவாகுவார். அனைவரும் ஒன்றுபட்டால் தலைமைத்துவம் உருவாகும். ஆகவே அரசியல்வாதிகள் தமது குறுகிய அரசியல் இலாபத்துக்காக போராடுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தார். (இ-60)

## புதிய அரசியலமைப்புக்கு இடமளிக்க வேண்டாமாம்

### ஞானசார தேரர் கூறுகிறார்



(கொழும்பு)

அரச சார்பற்ற அமைப்புக்களின் தேவைக்கு ஏற்றாற் போல் இந்நாட்டுக்கு புதிய அரசியலமைப்பை கொண்டு வரும் நடவடிக்கைக்கு இடமளிக்கக்கூடாது எனவும், அந்த சிந்தனையையும் நடவடிக்கையையும் விரட்டியடிக்க வேண்டும் எனவும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசியலமைப்பு தொடர்பிலான தலைப்பு அரசியல் மேடைக்கு பேசு பொருளாக வருவதற்கு பிரதான காரணம் நாட்டிலுள்ள ஏனைய பிரச்சினைகளை மூடிமறைப்பதற்கேயாகும் எனவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நாட்டில் புதிய அரசியலமைப்பொன்று எந்தக் காரணம் கொண்டும் நிறைவேற்ற இடமளிக்கக்கூடாது எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புதையல் தோண்டிய ஐவர் கைது

(ஏறாவூர்)

ஏறாவூர்-தலவாய் பகுதியில் புதையல் தேடும் நோக்கில், நிலத்தைத் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பொன்றின்போதே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, நிலத்தைத் தோண்டும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள், பூஜைப் பொருட்கள் மற்றும் கெப் வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும், கைது செய்யப்பட்டவர்கள் ஊறணி, கடுவளை, மொனராகலை, ஹேம்மாதகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அமைதிப் படையால் உயிரிழந்தோர் நினைவுகூரல்

(யாழ்ப்பாணம்)

இந்திய அமைதிப்படையால் யாழில் படுகொலை செய்யப்பட்டவர்கள் தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் நினைவு கூரப்பட்டனர். இந்நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் யாழில் அமைந்துள்ள குறித்த பேரவையின் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்திய இராணுவத்தால் 1989 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வல்வைப் படுகொலை. 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி பிரம்படி படுகொலை, 1987 ஆம்' ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் நடந்த படுகொலைகள் உட்பட ஏனைய படுகொலைகளும் நினைவு கூரப்பட்டுள்ளன.

இந்நினைவு நிகழ்வின் போது இந்திய அரசிடம் ஐந்தம்ச கோரிக்கையை முன்வைத்து உண்ணா விரதம் இருந்து உயிர்துறந்த லெப்டினன்ட் கேணல் திலீபனும் நினைவு கூரப்பட்டிருந்தார். முன்னதாக இந்திய இராணுவம் மேற்கொண்ட படுகொலைகளின் சாட்சியாகவுள்ள புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு அதற்கு மலர் அஞ்சலி மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலிகள் இடம்பெற்றன. இதன் போது பொது மக்கள்பலரும்கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (இ-4)











நவாலி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த 21 ஆம் திகதி பாடசாலை பிரதி அதிபர் பொ. ஆறுமுகரஞ்சன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டார்.

## பங்குப் பணிமனை திறப்புவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

பாசையூர் பங்குப் பணிமனைதிறப்புவிழாநாளைபுதன் கிழமைபிற்பகல்4.30மணிக்கு பாசையூர் பங்குத் தந்தை லியோ ஆம்ஸ்ரோர் அடிகளார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ். ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டு புதிய பங்குப் பணிமனையை திறந்து வைப்பார். (இ-10-107)

## பால்நிலை சமத்துவத்தை கட்டியெழுப்புதல் குறித்து யாழில் இன்று கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம் பிரிவு-D (சமூக விஞ்ஞானம்) ஏற்பாட்டில் ஆரோக்கியமான வேலைச் சூழ்நிலையையும் பால் நிலைச் சமத்துவத்தையும் கட்டியெழுப்புதல் எனும் தொனிப் பொருளிலான கருத்தமர்வு இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் கருத்துரைகளை சட்டத்தரணி சுபாஜினி கிசோ அன்ரன் வழங்குவார். (இ-10-102)

# கூட்டு எதிரணிக்கு பாதுகாப்பு இல்லை

## பந்துல கவலை

(கொழும்பு)



இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரத்தை பகிரங்கப்படுத்தியதன் காரணமாக கூட்டு எதிர்க் கட்சியினருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நீடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். மத்திய வங்கியின்பிணைமுறி விவகாரத்தில் முக்கிய விடயமொன்றை வெளியிட்டமைக்காக அனீகா என்ற சாட்சியாளருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதற்காக அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த விடயத்தை ஆரம்பம் தொட்டு பகிரங்கப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியவர்கள் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இதனால், தற்போது அவர்களுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்விடயத்தில் தலையிட்டு கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பந்துல குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# மாணவனின் புத்தகங்களுக்கு கோபத்தில் தீ வைத்த ஆசிரியை

(கொழும்பு)

தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனின் பாடப் புத்தகங்களை பாடசாலையில் வைத்து ஆசிரியையொருவர் தீக்கிரையாக்கியுள்ளார்.

வடமத்திய மாகாணத்தின் அநுராதபுர கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலையொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மாணவனின் தாய், கல்வி அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்த போதிலும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

புதிய வகுப்பறை ஒன்றுக்கு இடம் மாறிச் சென்ற போது குறித்த தினத்தில் மாணவன் பாடசாலைக்கு சமுகமளிக்காத நிலையில், ஆசிரியை குறித்த மாணவர் பாடசாலையில் விட்டுச் சென்ற புத்தகங்களை தீயிட்டு கொளுத்தியுள்ளார்.

குறித்த ஆசிரியை நடத்திய தனியார் புலமைப் பரிசில் வகுப்பிற்கு சமுகமளிக்காத கோபத்தினால் ஆசிரியை இவ்வாறு மாணவனின் பாடப் புத்தகங்களை தீயிட்டுக் கொளுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியையின் தனியார் வகுப்பில் கல்வி கற்காத 21 மாணவர்களை பல்வேறு வழிகளில் இந்த ஆசிரியை துன்புறுத்தியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

"வித்யா செம்மல்"

திரு.தேவராசா ஐங்கரன்

SLTS 2 -II (NDT in Sci, SPL Trnd in Sci, B.Ed.(r)
Dip.in Psychology (1st Class), Dip.in Edu mgt, IPICT,
Cert in Psychology & Counseling (University of Peradeniya)
K/ Azhar Central College Akurana, Kandy

நேற்று (23.10.2017) திங்கட்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடம் சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" - 2017 விருதினைப் பெற்றதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு மென்மேலும் சிறப்புகள், உயர்வுகள் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



(146)

அன்புடன் வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பிமார், தங்கைமார்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: BSc/அமெரிக்கா<br>தொ.இ: B/7133 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 55<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் : BA, விரிவுரையாளர்<br>தொ.இ: G/5181 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் 0/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7134 | பிறீப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் BA/அரச தொழில்<br>தொ.இ: G/5183 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/7136 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 15 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 154CM<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5191 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில் A/L அரச தொழில்<br>தொ.இ: B/7141 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BFA/<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5196 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# முக்கிய ஆலோசனை வழங்க கருணாநிதிக்கு பேச்சுப் பயிற்சி



(சென்னை)

கட்சிக்கு ஆலோசனை வழங்க தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு பேச்சுப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி கடந்த ஒரு வருடமாக உடல் நலக்குறைவு காரணமாக கோபாலபுரம் வீட்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரது உடல்நிலை நாளுக்கு நாள் முன்னேறி வருகிறது. கடந்த வாரம் முரசொலி அலுவலகத்துக்கு அவரை அழைத்து வந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த முரசொலி கண காட்சியை பார்வையிட வைத்தனர்.

கண்காட்சியை பார்வையிடுவதன் மூலம் அவருக்கு மீண்டும் பழைய நினைவுகள் திரும்பும் என்ற அடிப்படையில் அனைத்து அரங்குகளையும் சுற்றிக் காண்பித்தனர்.

அங்கிருந்த ஒவ்வொரு படங்களையும் பார்க்கும் போது அவருக்கு நினைவுகள் நன்றாக வரத் தொடங்கின. இதை அவரது முக மலர்ச்சியை வைத்து கண்டு பிடிக்க முடிந்தது.

அங்கு கூடி நின்ற தொண்டர்களை பார்த்து அவர் கை அசைத்தபோது அனைவருக்கும் அளவில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து கருணாநிதிக்கு பேச்சுப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது சளி தொந்தரவு வராமல் இருப்பதற்காக தொண்டையில் 'டியூப்' மாட்டப்பட்டுள்ளது. இதை அவ்வப்போது எடுத்து விட்டு பேச்சுப் பயிற்சி கொடுத்து வருகிறார்கள்.

இன்னும் ஓரிரு மாதங்களில் அவருக்கு மாட்டப்பட்டுள்ள 'டியூப்' முழுமையாக அகற்றப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்பிறகு அவர் முழுமையாக பேசும் அளவுக்கு பயிற்சி கொடுக்கப்படும் எனத் தெரிகிறது. எனவே இன்னும் 3 மாதத்தில் எப்போதும் போல் பேசும் ஆற்றல் கருணாநிதிக்கு வந்து விடும் என்று வைத்தியர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கருணாநிதி முழு அளவில் குணம் அடைந்ததும் கட்சிக்கு ஆலோசனை வழங்கி வழி நடத்தும் அளவுக்கு அவரது செயற்பாடு அமையும் என்று கட்சி நிர்வாகிகள் கருத்து தெரிவித்தனர். (8)

# பிரித்தானியாவில் ...




(லண்டன்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகளை உடன் விடுவிக்கப்பட வேண்டும். இராணுவம் அபகரித்து தம்வசம் வைத்துள்ள மக்களின் காணி நிலங்களை மீள கையளிக்க வேண்டும். வலிந்து காணாமல் செய்யப்பட்டவர்கள் தொடர்பான உண்மையான விபரங்கள் வெளியிடப்பட வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன் வைத்து நேற்று முன்தினம்

# பேரறிவாளனின் பரோல் இன்றுடன் நிறைவு



(வேலூர்)

பேரறிவாளனின் பரோல் இன்றுடன் முடிவடைகிறது. இன்று மாலை 5 மணிக்குள் பேரறிவாளன் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட வேண்டும்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி ஒரு மாத பரோலில், பல்வேறு நிபந்தனைகளுடன் பேரறிவாளன் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வீட்டுக்கு அழைத்து செல்லப்பட்டார்.

பின்னர் பரோல் முடிவடைய சில நாட்கள் இருந்த நிலையில். பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள் தமிழக முதல்வருக்கு மீண்டும் ஒரு கோரிக்கை மனு அனுப்பினார்.

அதில், மகனின் பரோலை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீட்டிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இதைத் தொடர்ந்து பேரறிவாளனுக்கு, மீண்டும் ஒரு மாத பரோல் நீட்டிப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில், பேரறிவாளனின் பரோல் இன்றுடன் முடிவடைகிறது. இன்று மாலை 5 மணிக்குள் பேரறிவாளன் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட வேண்டும்.

இதற்கிடையில், பேரறிவாளன் தாய் அற்புதம்மாள், கணவர் குயில்தாசன் உடல் நிலையைக் காரணம் காட்டி மீண்டும் பரோல் நீட்டிப்பு வழங்க வேண்டும் என 3 ஆவது முறையாக அரசுக்கு கோரிக்கை மனு அளித்துள்ளார். இதனை அரசு பரிசீலிக்குமா? இல்லையா? என்பது உறுதி செய்யப்படவில்லை.

இது குறித்து வேலூர் சிறை அதிகாரிகள் கூறுகையில்,

இன்று மாலை 5 மணிக்குள் பேரறிவாளன் சிறைக்கு கொண்டு வரப்படுவார். அதன் பிறகு அவருக்கு வழக்கமான மருத்துவ பரிசோதனை நடத்தப்படும். அதன் பின்னர் பரோல் வழங்கினாலும் அவரை வீட்டுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர். (8)

# தூதர் பதவியை இழந்தா... சிம்பாவே ஜனாதிபதி முகாபே...



(ஜெனீவா)

பலத்த எதிர்ப்பு மற்றும் கண்டனத்தை தொடர்ந்து ராபர்ட் முகாபேயை நல்லெண்ண தூதர் பதவியில் இருந்து நீக்குவதாக உலக சுகாதார நிறுவன இயக்குநர் டெட்ரோஸ் அதானம் கேபிரியேசுஸ் அறிவித்துள்ளார்.

சிம்பாவே ஜனாதிபதியாக ராபர்ட் முகாபே (வயது-93) கடந்த 37 ஆண்டு காலமாக பதவி வகித்து வருகிறார். இவரை நல்லெண்ண தூதராக உலக சுகாதார நிறுவனம் அண்மையில் நியமித்தது.

அதற்கான அறிவிப்பை உலக சுகாதார நிறுவனத்தின் புதிய பணிப்பாளர் ஜெனரல் டெட்ராஸ் அதானம் காபிரியேசுஸ் வெளியிட்டார். இதற்கு இங்கிலாந்து அரசு, கனடா பிரதமர், ஐ.நா. கண்காணிப்பு குழு, உலக இருதய பெடரேசன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் எதிர்ப்புத் தெ... தன.

சிம்பாவே ஜனாதிபதி ... முகாபே மீது மனித உ... மீறல்கள் புகாருள்ளது. ... இவரது 37 ஆண்டு கால... யில் 20 ஆண்டுகள் சுகாத... க்கு முன்னுரிமை கொடுத்... கள் நலனில் அக்கறை செ... வந்தார்.

சிம்பாவேயில் 200... ஆண்டில் பொருளாதார ... பாதிக்கப்பட்டதில் இருந்து ... சுகாதார நிலை படுமோச... நிலையில் உள்ளது. எ... அவருக்கு உலக சுகாதார ... னம் நல்லெ...ண தூதர் ... அளிக்கக் கூடாது என எதி... கிளம்பியது.

பலத்த எதிர்ப்பு மற்றும் ... னத்தை தொடர்ந்து ராபர்ட் ... பேயை நல்லெண்ண தூத... வியிலிருந்து நீக்குவதாக ... சுகாதார நிறுவன இயக்குந... ரோஸ் அதானம் கேபிரி... அறிவித்துள்ளார்.

# எம்.ஜி.ஆர். நூற்றாண்டை முன்னிட்டு விழாக்கோலம் பூண்டது சிவகாசி



கோட்டை போன்று அமைக்கப்பட்டுள்ள விழா மேடையின் வெளிப்புற தோற்றம்



பிரமாண்ட கட் அவுட் தோரணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிமேட்டில் களேபர...

## 5 பேருந்துகள் 10 வாகனங்கள் சேத...

(ராயபுரம்)

காசிமேட்டில் வீதிமறியலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். இதை கண்டித்து 5 பேருந்துகள் மற்றும் 10 வாகனங்கள் உடைக்கப்பட்டன.

விசைப்படகுகளில் சில மீனவர்கள் அதிக குதிரைத்திறன் கொண்ட சீன இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதால் கடல் வளம் பாதிக்கப்படுவதாகவும் அதனை பயன்படுத்தாத ஏராளமான மீனவர்களின் தொழிலும் பாதிப்புக்குள்ளதாகவும் ஏனைய மீனவர்கள் குற்றம் சாட்டி வந்தனர்.

இந்த நிலையில் சீன இயந்திரம் குறித்து விசாரணை நடத்து... மீனவர்கள் சிலரை காசிமேடு ... துறைமுக பொலிஸார் நேற்று... தினம் அழைத்துச் சென்றனர். ... கள் மாலை வரையில் வீடு திரு... ல்லை என்று கூறப்படுகிறது. இ... கண்டித்து நேற்று முன்தினம் ... யில் மீன் வளத்துறை உதவி இ... நர் அலு லகத்தை முற்றுகை... மீனவர்கள் போராட்டம் நடத்தி...

பொலிஸார் பேச்சுவார்த்தை... திய பின்னரும் மீனவர்கள் மறி... கைவிடவில்லை. இதைத் தொ... பொலிஸார் திடீரென தடியடி ... னர். இதனால் மறியலில் ஈ...

# வெளிநாடு

## எதிரொலித்தது தமிழர் குரல்




22 ஆம் திக்தி பிரித்தானியாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இக் கவனயீர்ப்பு போராட்டம் இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவாகவும் வலுச்சேர்க்கும் வகையிலும் அமைந்திருந்தது. இதில் பெருமளவான இளையோர்கள் கலந்து கொண்டிருந்தனர் . போராட்டத்தின் முடிவில் இம் மூன்று கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பிரித்தானிய பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.(8)

## மலேசியாவில் மண்சரிவு




மலேசியாவில் இடம்பெற்றுள்ள பாரிய மண்சரிவில் சிக்கி கட்டுமானப் பணியாளர்கள் 11 பேர் பலியாகியுள்ளனர்.

மலேசியாவின் ஜோர்ஜ் நகரில் 49 மாடிகளைக் கொண்ட கட்டடத்தொகுதியொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அங்கு கட்டுமானப் பணி இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் கடந்த சனிக்கிழமை மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று வெளிநாட்டுத் தொழிலாளர்கள் நால்வரின் சடலங்களை இடிபாடுகளிலிருந்து மீட்புப் பணியாளர்கள் மீட்டனர். இந்நிலையில் மேலும் 7 பேரின் சடலங்களை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மண்சரிவில் புதையுண்டவர்களை மீட்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இக்கட்டுமானப்பணியில் இந்தோனேஷியா, பங்களாதேஷ், மியன்மார், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (8)

## பொதுமக்களை குறிவைக்கும் போகோஹராம் தீவிரவாதிகள்

### நைஜீரியாவில் 13 பேர் பலி!



(அபுஜா)

நைஜீரியா நாட்டில் போகோஹராம் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியா நாட்டில் போகோஹராம் தீவிரவாதிகள் பொது மக்களை குறி வைத்து தொடர்ச்சியாக பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதில் ஏராளமானோர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

. இந்நிலையில், நைஜீரியா நாட்டின் மைதுகுரி நகரில் போகோஹராம் தீவிரவாதிகள் சிலர் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தினர். இந்த கொடூர தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் 13 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர். மேலும், 5 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு நைஜீரியாவின் மைதுகுரி நகரில் மக்கள் நடமாட்டமுள்ள பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதால், பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (8)

## வடகொரியா மீதான அழுத்தத்தை அதிகரிக்க ட்ரம்ப்- அபே உறுதி

### ஜப்பான் அரசு தெரிவிப்பு

(டோக்கியோ)

வடகொரியா மீதான அழுத்தத்தை அதிகரிக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே உறுதி யேற்றுள்ளதாக ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாடுகளின் கண்டனங்களை பொருட்படுத்தாமல் வடகொரியா பல முறை ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளது. மேலும், சில மாதங்களுக்கு முன்னர் அணுகுண்டு சோதனையும் நடத்தியது. இதனையடுத்து, அந்நாட்டின் மீது பல்வேறு பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜப்பான் பிரதமர் சின்சோ அபே ஆகியோர் இணைந்து வட கொரியாவின் மீதான அழுத் தத்தை அதிகரிக்க உறுதி யேற்றுள்ளதாக ஜப்பானின் தலைமை துணை கேபினட் செயலர் நிஷிமுரா கூறியுள்ளார்.

அடுத்த மாதம் 5ஆம் திகதி முதன் முறையாக ஜப்பானுக்கு வருகை தரும் ட்ரம்ப், வடகொரியா விவகாரம் தொடர்பாக அபே உடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகவும் தனது பேட்டியில் நிஷிமுரா தெரிவித்துள்ளார். (8)

## பயங்கரவாதிகளை சுற்றிவளைத்த பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர்



(கராச்சி)

பாகிஸ்தானில் பாதுகாப்பு படையினருக்கும் பயங்கரவாத இயக்கத்தை சேர்ந்தவருக்கும் நிகழ்ந்த கடும் துப்பாக்கிச் சண்டையில் 8 பயங்கரவாதிகள் பலியானார்கள்.

பாகிஸ்தானில் கராச்சி நகரில், ராயீஸ் கோத் பகுதியில், ஏ.எஸ்.பி. என்று அழைக்கப்படுகிற அன்சருல் ஷரியா பாகிஸ்தான் என்ற பயங்கரவாத இயக்கத்தை சேர்ந்த பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பயங்கரவாத தடுப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து கடந்த சனிக்கிழமை இரவு அந்த படையினர், எல்லை பாதுகாப்பு படையினருடன் சேர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்து, சுற்றி வளைத்தனர். அப்போது பயங்கரவாதிகளை சரண் அடையுமாறு அறிவித்தனர். ஆனால் மறைவிடத்தில் இருந்த பயங்கரவாதிகள் மீது சரமாரியாக துப்பாக்கியால் தாக்குதல் நடத்தினர்.

உடனே பயங்கரவாத தடுப்பு படையினரும், எல்லை பாதுகாப்பு படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். இரு தரப்பிலும் நீண்ட நேரம் கடும் துப்பாக்கி சண்டை நடந்தது.

இச்சண்டையின் முடிவில் 5 பயங்கரவாதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த நிலையில், வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது வழியில் 3 பயங்கரவாதிகள் இறந்த னர்.

இச் சண்டையின்போது பயங்கரவாத தடுப்பு படை வீரர் ஒருவரும், எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் 2 பேரும் படுகாயம் அடைந்தனர். அவர்கள் சம்பவ இடத்தில் இருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இத் துப்பாக்கி சண்டையின்போது பயங்கரவாதிகளிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன. (8)

மீனவர்கள் கலைந்து ஓடினார்கள். அப்போது கூட்டத்தில் இருந்து சிலர் கற்களை சரமாரியாக வீசினர்.

இக்கல்வீச்சில் 5 மாநகர பேருந்துகளின் கண்ணாடிகள் உடைந்தன. வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 இற்கும் மேற்பட்ட முச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்களும் சேதம் அடைந்தன. இதனால் அப்பகுதியில் போர்க்களம் போல காட்சி அளித்தது.

அமைதியான முறையில் நடந்த வீதி மறியலில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்திய பின்னரே அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவியது. (8)

## மீண்டும் பிரதமரானார் ஷின்சோ அபே

(டோக்கியோ)

ஜப்பானில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட ஷின்சோ அபேயின் சுதந்திர ஜனநாயக கட்சி தலைமையிலான கூட்டணி, 312 இடங்களை பெற்று ஆட்சியை அமைக்கிறது.

வடகொரியா மீது உலக நாடுகள் விதித்துள்ள பொருளாதார தடைகளுக்கு ஜப்பான் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகிறது. இதையடுத்து, வடகொரியாவுக்கு எதிரான ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நடவடிக்கை குறித்து நடத்தப்பட்ட மாதிரி வாக்கெடுப்பில் அவருக்கு ஆதரவாக 44 சதவீதம் பேர் [illegible] [illegible]கிய எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சிக்கு வெறும் எட்டு சதவீத மக்கள் மட்டுமே ஆதரவு தெரிவித்தனர். யாரை ஆதரிப்பது? என்று இன்னும் தீர்மானிக்கவில்லை என சுமார்.20 சதவீதம் பேர் குறிப்பிட்டிருந்தனர்.



இதையடுத்து, மக்கள் செல்வாக்கு உள்ளபோதே பாராளுமன்ற தேர்தலை நடத்தி மீண்டும் பிரதமராக தீர்மானித்துள்ள ஷின்சோ அபே கடந்த மாதம் 28ஆம் திகதி பாராளுமன்றத்தை கலைத்து உத்தரவிட்டார்.

இதற்கிடையே, பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. மொத்தமுள்ள 465 இடங்களில் சுமார் 1,200 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஜப்பானின் பல பகுதிகளில் லேன் சூறாவளி வீசி வரும் நிலையில் அங்கு கனமழை பெய்து வருகிறது. ஆனாலும், வாக்குப்பதிவு தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிலையில், பிரதிநிதிகள் சபைக்கான தேர்தலில், மொத்தமுள்ள 465 இடங்களில் ஷின்சோ அபேயின் சுதந்திர ஜனநாயக கட்சி தலைமையிலான கூட்டணி 312 இடங்களை பெற்றது.

மூன்றில் இரண்டு பங்கு இடம் கிடைத்துள்ளது என்பதால் சுதந்திர ஜனநாயக கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சியை அமைக்கிறது. ஷின்சோ அபே மீண்டும் பிரதமராவது உறுதி என அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### புதிய அரசியலமைப்பு பொருத்தமில்லை

# இடைக்கால அறிக்கையை திரும்பப் பெற வேண்டும்

## கல்யாணி காரக சங்க சபா முடிவு

(கொழும்பு)

**இப்போதைய சூழலுக்குப் புதிய அரசியலமைப்பு பொருத்தமில்லை என்பதால், வழிநடத்தல் குழுவினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை தற்காலிகமாக விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கோட்டே சிறி கல்யாணி சமக்ரி தர்ம மகா சங்க சபாவின் கல்யாணி காரக சபா ஒருமன தாக தீர்மானித்துள்ளது.**



கோட்டே சிறி கல்யாணி சமக்ரி தர்ம மகாசங்க சபாவின் அநுநாயக்க தேரரான பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

"புதிய அரசியலமைப்பு தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். அரசிலமைப்பில் திருத்தங்கள் தேவைப்பட்டால் அதனைப் பின்னர் செய்து கொள்ள முடியும்.

புதிய அரசியலமைப்பு தொடர்பாக காரக சங்க சபாவில் இரண்டு மணி நேரம் விவாதிக்கப்பட்டது.

கோட்டே கல்யாணி காரக சங்க சபா கூட்டத்தில் கோட்டே சிறி கல்யாணி சமக்ரி தர்ம மகாசங்க சபாவின் மகாநாயக்கரான இட்டபனே தம்மாலங்கார தேரர் கலந்து கொள்ளவில்லை. அவர் வெளிநாடு சென்றதால் இதில் பங்கேற்கவில்லை.

எனினும், மகா நாயக்கரின் ஆசியுடனேயே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. காரக சங்க சபாவில் எடுக்கப்பட்ட முடிவை அவர் அங்கீகரிப்பார். இந்த விடயம் தொடர்பாக விரைவில் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்படும்.

வெளியிடப்பட்டுள்ளது வெறும் பரிந்துரைகள் மட்டுமே என்று ஜனாதிபதியும் பிரதமரும் கூறியுள்ளனர்.

இது ஒரு வரைவோ அல்லது சட்டமூலமோ அல்ல என்பது எமக்குத் தெரியும். எனினும் புதிய அரசியலமைப்பு இதனை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படவுள்ளது.

புதிய அரசியலமைப்பை வரைவதற்கு முன்னர் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அது இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ளவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## டில்லிக்கு பயணமாகிறார் மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த மாதம் டில்லிக்குப் பயணம் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாக, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுடன் முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், டில்லிக்குப் பயணமாவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, மகாராஷ்டிரா மாநிலத்தில் நடக்கும் மத நிகழ்வு ஒன்றில் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்திய அரசாங்கத்தின் பின்புலத்துடன், மகிந்த ராஜபக்ஷ இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொழும்பு வந்திருந்த போது, டில்லிக்கு வருமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இந்த அரசாங்கம் தொடர்ந்தால் நாடு விரைவில் அழிந்துவிடும்!

## விமல தேரர் திஸ்ஸவிடம் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் நிலை தொடர்ந்தும் இவ்வாறே செல்லுமானால் நாடு விரைவில் அழிவைச் சந்திக்கும் என கடம்பே ராஜோபவனாராதிபதி கெப்படியாகொட ஸ்ரீவிமல தேரர் எச்சரித்தார்.

மேலும், தற்பொழுது மாட்டியுள்ள அரசாங்கத்திலிருந்து விடுபடுவதற்கு சந்தர்ப்பத்தை மக்கள் எதிர்ப்பார்த்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் கடம்பே ராஜோபவனாராதிபதி கெப்படியாகொட ஸ்ரீவிமலவைச் சந்தித்து ஆசீர்வாதம் பெறச் சென்ற போதே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வரலாற்று நெடுகிலும் நாடு செல்ல வேண்டிய பாதையை சரிசெய்து கொடுத்தது மகா சங்கத்தினரே.

தற்போதைய அரசாங்கம் மகா சங்கத்தினருடன் முரண்பாட்டுடன் நடந்து கொள்கின்றது.

கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளில் திருப்தி காணாது என நினைத்தே மக்கள் இன்னொரு செயற்பாட்டுக்காக இந்த அரசாங்கத்தை தேர்ந்தெடுத்தனர்.

தற்பொழுது தேர்ந்தெடுத்த அரசாங்கம் இருந்த அரசாங்கத்தை விட மோசமாகவுள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஏதாவதொரு சூத்திரத்தை வைத்து தேர்தலைப் பிற்போட்டு வருகின்றது.

நாட்டின் தலைவர்கள் யார் யாரோ பின்னால் சென்று அதிகாரத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இருப்பினும், அவர்கள் அது தங்களுக்கு புண்ணியத்துக்காக கிடைத்த ஒன்று என்று நினைப்பதில்லை. இத்தகையவர்கள், ஒரு புறத்தில் வங்கியை நாசமாக்குகின்றனர்.

மறுபுறம் கல்வியையும் நாசமாக்கும் வரை பார்த்துள்ளனர். இது பரிதாப நிலையாகவே பார்க்க வேண்டியுள்ளது.

இந்நிலை தொடர்ந்து செல்லுமானால் நாடு அழிவைச் சந்திக்கும் எனவும் தேரர் எச்சரித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### புகார்த் தொனியில் பேசலாமா?

உங்க பிள்ளையைக் கண்டிச்சு வையுங்க! வளர்க்கத் தெரியாம வளர்த்து வைச்சிருங்கீங்களே! பாருங்க உங்க பிள்ளை பண்ணியிக்கிற அநியாயத்தை! என் மகன் சட்டையெல்லாம் ''இங்க்'' என்பது ஓர் அணுகுமுறை.

''எப்பவும் கொய்ட்டா இருப்பான் உங்க பையன் அவனா இப்படி ''இங்கை'' ஊத்தி வைச்சான்னு எனக்கே ஆச்சரியமா இருக்கு. நான் என்றபடியால பரவாயில்லை. மற்றவர்கள் என்றால் சண்டைக்கே வந்திருப்பாங்க'' என்பது மற்றோர் அணுகுமுறை.

''சலானே. இல்லை எப்படிப் பணம் கட்டுறது என்னய்யா பாங்க் நடத்துறீங்க நீங்க'' –இது முதல் பாணி.

முதலில் பணம் கட்டணும் சலான் இல்லை. எப்படிக் கட்டுறது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். இது இரண்டாவது பாணி. முதலில் ஏறாத சுருக் இரண்டாவது பாணியில் ஏறும். முதல் அணுகுமுறைக்கு இல்லாத பலன் இரண்டாவது அணுகுமுறைக்கு இருக்கும். பல விடயங்களைச் சம்பந்தப்பட்டவர்களிடம் தகவலாகச் சொன்னாலே போதும்.

சிலபேர் புகார் கொல்லும் போது, நீங்க பைல் வாங்கித் தரலை, நீங்க என்னிடம் சொல்லலை என்று எதிராளியை உள்ளே கொண்டு வந்து திணிப்பார்கள்.

இந்த நீங்க உங்கவையெல்லாம் நீக்கிவிட்டுப் பேச வேண்டும். பைல் இருந்திருந்தா வேலை முடிஞ்சு போயிருக்கும் என்றும் எனக்கு எதுவும் தகவல் இல்லை என்றும் திருத்திச் சொல்ல வேண்டும்.

தாங்கள் தவறே செய்திருந்தாலும் அதை எவரும் சுட்டிக்காட்டக்கூடாது என்று எதிர்பார்க்கும் மனிதர்கள் நிறைந்த உலகம் இது.

ஆனால் அதையே நாம் பக்குவமாக எடுத்துச் சொன்னால் ஆமா! தப்பு எம்பேர்லதான் என்று ஒப்புக்கொள்கிறார்கள். சிலசமயம் வெளியில் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் உள்ளுக்குள் உணரவாவது செய்கிறார்கள்.

புகார்த் தொனியில் பேசுவதை எவரும் விரும்புவது இல்லை. புகார்த் தொனியில் பேசுபவர்கள் மற்றவர்களின் தவறுகளை உணர வைப்பதில் வெற்றி பெறுவதும் இல்லை. அது மட்டுமல்ல அவர்கள் எதிர்பார்க்கும் எந்த எதிர்பார்ப்பும் நிகழ்வது இல்லை.

மாறாக எல்லோருடைய வெறுப்பிற்கும் ஆளாகி செமர்த்தியாகவும் ஒன்றிற்கு இரண்டாகவும் பதிலுக்கு வாங்கிக் கட்டிக் கொள்கிறார்கள்.

காரியவாதிகள் எவரும் புகார்த் தொனியில் பேசுவதே இல்லை!

**லேனா தமிழ்வாணன்**

# உங்களால் முடியுமா?




தமிழ்மொழிக் கற்கை இன்று வையகம் எங்கும் சிறப்பாக நடைபெறு கின்றது. புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலே வாழும் தமிழர்களின் இளைய தலைமுறை தமிழ்மொழியைத் தமதுபாரம்பரியமொழியாகச் சிறப்பாகக் கற்று வருகின்றது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ்ச் சிறார்கள் மிக ஆர்வமாகத் தமிழ்மொழியைக் கற்கின்றனர். வாழிடமொழியிலே பள்ளிக் கல்வியை மேற்கொள்ளும் இச்சிறார்கள் தமிழ்மொழியையும் கிழமையில் ஒருநாள் தனித்துவமாகக் கற்று இன்று தமிழ்மொழியைக் கற்பிக்கும் தமிழாசிரியர்களாகவும் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் தமிழ் மொழிக் கற்பித்தலை ஒரு மகிழ்வூட்டும் கற்கையாகச் செய்ய விரும்புகின்றனர்.

எனவே அதற்கான கற்பித்தற் செயற்பாட்டுக்கான உசாத்துணைகளைத் தேடுகின்றனர். மொழிக் கற்கையில் மாணவரது கேட்டல், உள்வாங்குதல், பேசுதல், எழுதுதல் என்னும் நான்கு திறன்களையும் அடைவதற்கான புதிய செயற்பாடுகளைத் திட்டம் இட விரும்புகின்றனர். அவர்களுக்கு எமது பண்டைய வாய்மொழிக்கற்கை முறைமையும் துணைசெய்யவல்லது அதனை விளக்கும் நிலையில் பலசெயற்பாடுகள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் விடுகதை களாகும்.

குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியோர், பொதுமக்கள் எல்லோருமே இயல்பாகவே பொழுதுபோக்கு வேளைகளில் ஒரு மனப் பயிற்சியைப் பெறுகிறார்கள். இந்நிலையில் வினாக்களைக் கேட்டு விடை கூறலும் நம்முன்னோர்களது பொழுது போக்காக இருந்துள்ளது. கேட்கின்ற வினாவிலே மறைவாய் விடையும் அமைந்திருக்கும். அதனால் இந்த அமைப்பு "விடுகதை" என்றழைக்கப்பட்டது. விடுகதைகள் மக்களின் இயல்பான மனப்பாங்கையே அடிப்படையாகக்கொண்டமைவதால் அவற்றுக்கு எல்லோருமே விடையளிக்க முடியும். ஒரு நாட்டின் இயற்கை நிலையையும் பண்பாட்டு நிலையையும் ஏனையோர் அறிவதற்கு விடுகதைகள் பெரிதும் துணை செய்யும்.

கலைகள், தொழில்கள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை நிலை, இயற்கைச் சூழல், புழங்கு பொருட்கள், மனப்போக்குகள் முதலிய பல துறைகள் பற்றியதாக விடுகதைகள் அமையும். அதனால் பொது மக்கள் முதல் அறிஞர்வரை எல்லோருமே விடுகதைகளை அமைக்கலாம்.

தமிழ்மொழிப் பயன்பாட்டிலே சிறப்பு ஆற்றல் பெறுவதற்கு விடுகதைகள் பெரிதும் பயன்படும். விடுகதைகளைப் பாட்டாகவும் உரை நடையாகவும் அமைக்கலாம். முதியவர்களின் பட்டறிவை விடுகதைகள் தெளிவாகப் புலப்படுத்தும். இளையோரை இயற்கையைக் கண்கா ணிக்கத் தூண்டும். சிறுவர்களின் மனப்பதிலை வலுப்படுத் தும். சில அறியாத கருத்துக்களைத் தேடவும் வைக்கும். அவர்களது அறிவை மேலும் கூர்மையாக்கும் பொறிமுறைகளோடு போராடுபவர்களுக்கு இது ஒரு புதிய வழி காட்டலாய் அமையும்.

இச்சிறிய தொகுப்பு நூல் தமிழ்மொழியைக் கற்பிப்பவர்களுக்கு ஒரு சிறிய கருவியாகப் பயன்படும். சிறுவர்கள் மகிழ்வாகத் தமிழ் மொழிக் கற்கையில் ஈடுபடத் தூண்டுகோலாக அமையும். அதற்காகவே தொகுப்புக்கு "உங்களால் முடியுமா?" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது எல்லோருடைய உள்ளத்திலும் "என்னால் முடியும்" என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். மற்றவர்களிடம் இந்த விடுகதைக்கு விடை கேட்டு அவர்களை மடக்கலாம். எனச் செயற்படச் செய்யும். விடுகதைகளின் விடைகளைக் கண்டறியும் போது என்னாலும் விடுகதைகளை ஆக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும்.

வகுப்பறையிலே குழு நிலையிலே பிரிந்து போட்டியாகச் செயற்பட இத்திட்டம் துணை செய்யும். தமிழ் மொழி அறிவால் ஒன்றிணைந்து பலவிடுகதைகளை மாணவர்கள் ஆக்கலாம். தமிழாசிரியர் நடுவராக இரு அணியாக மாணவர் பிரிந்து ஒரு அறிவுக் களத்திலே விடுகதைகளைப் புதிய படைக்கலமாக்கி அறிவுப்போர் புரிய வகுப்பறை கலகலப்பாக இருக்கும். மாணவரிடையே புகுந்துள்ள சோகமும், சோம்பலும் மறையப் புத்துணர்வு பெருகும்.

விளையாட்டு நிலையிலே குழுநிலை இயக்கம் செயற்பட கேட்டல், உள்வாங்கல், பேசுதல் என்னும் மூன்று ஆற்றல்களும் மாணவரிடையே வந்து சேரும்.

வையகமெங்கும் தமிழ் மொழிக் கற்கையை மேற்கொண்டு வாழும் மாணவர் எல்லோரும் இத்தொகுப்பை ஒரு கைநூலாகப் பயன்படுத்த வேண்டும்.

**பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்.**

# அரசியல் கைதிகள் வழக்கை வவுனியாவுக்கு மாற்ற சட்டமா அதிபர் தயார்

## சாட்சிகள் பின்னடிப்பு-சுமந்திரன்



(கரணவாய்)

வவுனியாவிலிருந்து அநுராதபுர நீதிமன்றிற்கு மாற்றப்பட்ட வழக்கினை மீண்டும் வவுனியாவிற்கு மாற்ற சட்டமா அதிபர் தயார். ஆனால் சாட்சிகளோ பின்னடிக்கின்றனர் என யாழ்.பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கரணவாயில் அமைந்துள்ள தமிழரசுக்கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசி இருக்கின்றோம். சட்டமா அதிபருடனும் பேசியுள்ளோம். சில அரசியல் கைதிகளை நீதிமன்றின் ஊடாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. வழக்குகளை வவுனியாவில் இருந்து அநுராதபுரம் மாற்றியமைக்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம்.

இவ் வழக்கு சட்டமா அதிபரினால் செய்யப்படுகின்ற ஒரு தீர்மானம். இதில் அரசியல் தலைவர்களுக்கு பங்கு இல்லை.

சாட்சிகளுக்கு பிரச்சினை இருந்தால் அந்த வழக்கை இன்னொரு நீதிமன்றுக்கு மாற்றுவதற்கு சட்டமா அதிபருக்கு சட்டத்தில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் சாட்சிகள் தமிழர்கள். அவர்கள் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள். அந்த மூவரும் தமிழ்ப் பிரதேசங்களில் சாட்சியம் கொடுக்க மறுக்கிறார்கள். சிங்கள பகுதி நீதிமன்றங்களிலே சாட்சியமளிக்க முடியும் எனச் சொல்லப்பட்டதாலே சட்டமா அதிபர் வழக்குகளை அவ்வாறு மாற்றியதாக சொல்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் கல்விக் கண்காட்சி கடந்த 19 ஆம் திகதி விஞ்ஞான ஆய்வுகூடத்தில் அதிபர் சேகுராஜிது தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ்.கல்வி வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் த.கதிர்காமநாதன் கலந்துகொண்டு மாணவர்களின் விஞ்ஞான செயன்முறைகளைப் பார்வையிட்டார்.

(படங்கள்: பாசையூர் செய்தியாளர்)

### பாராளுமன்றம் மீது குண்டுபோட்டாவது

# புதிய அரசியலமைப்பை தடுத்து நிறுத்துவேன்

## விமல் வீரவன்ச உறுதி



உத்தேச புதிய அரசியலமைப்புச் சட்டம் கொண்டுவரப்படுவதை நிறுத்த தான்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளப் போவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச சிறையில் இருந்த போது எழுதிய நூல் வெளியீட்டு விழா கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கொண்டுவரப்பட உள்ள பிரிவினைவாத அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் நிறைவேற்றப்பட்டால், நாட்டின் கெடுதியான பயணம் அன்றிலிருந்து ஆரம்பிக்கும்.

தேங்காயின் விலை தற்போது அதிகம். இதனால் தேங்காய் அல்ல வேறு எதனையாவது அடித்து சரி 78 நாடாளுமன்ற உறுப்பினர்களும்புதிய அரசியலமைப்புச்சட்டத்திற்கு ஆதரவாக கைகளை உயர்த்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அல்லது அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் தினத்திற்கு முதல் நாள் நாடாளுமன்றத்திற்கு மேலே சென்று குண்டு ஒன்றை போட்டாவது அதனை தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்தார். (இ-7)

# ஜெகந்நாதரின் இரத யாத்திரை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஸ்ரீ கிருஷ்ண பக்திக் கழகத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீஜெகந்நாதரின் இரத யாத்திரை எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். வண்ணார்பண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி யாழ்.துர்க்கா மணி மண்டபத்தில் நிறைவடையும்.

இதில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு அகிஞ்சன கிருஷ்ணதாஸ் கலந்து கொள்வார். (இ-10-19)

# சீனாவில் தங்கியிருந்தால் இலங்கையின் நிலைதான் பிலிப்பைன்ஸுக்கு ஏற்படும்

## அந்நாட்டு உதவி ஜனாதிபதி

(கொழும்பு)

சீனாவிடம் அதிகளவில் தங்கியிருக்கும் நிலை ஏற்படுமானால் இலங்கைக்கு இன்று நேர்ந்துள்ள நிலையே பிலிப்பைன்ஸுக்கும் ஏற்படும் என்று அந்த நாட்டின் உதவி ஜனாதிபதி லெனி ரோப்ரேடோ எச்சரித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் தமது திட்டங்களுக்காக புதிய நிதி வளங்களை தேடவேண்டிய அவசியம் உள்ளது.

இதனைவிடுத்து சீனாவிடம் அதிகமாக தங்கியிருந்தால் இலங்கை சீனாவுக்கு முன் முகங்கொடுத்துள்ள பாரிய கடன்சுமை நிலைமையே பிலிப்பைன்ஸுக்கும் ஏற்படும் என்று லெனி குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சீனாவின் 175 பில்லியன் கடனுதவியில் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்தபோதே அவர் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி பல்கலை.மாணவர்கள் கையெழுத்து போராட்டம்

(யாழ்ப்பாணம்) **வடக்கிலும் கிழக்கிலும் நேற்று முன்னெடுப்பு**

**பல வருடங்களாக எவ்வித விசாரணையும் இன்றி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனையும் இன்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி வடக்கு-கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றைய தினம் மாபெரும் கையெழுத்துவேட்டை போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.**








(படங்கள்:-உ.சாளின்)





இந்த போராட்டம் யாழ். பல்கலைக்கழத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகி திருநெல்வேலி, யாழ்ப்பாணம், நல்லூர், சுன்னாகம் என முக்கிய இடங்களில் நடைபெற்றது.

இந்த போராட்டம் தொடர்ந்து நடைபெறவுள்ளதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. இதே போராட்டம் சமவேளையில் கிழக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தின் மூலம் முன்வைத்துள்ள கோரிக்கைகளாக,

• அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கைதிகளின் வழக்குகள் அநுராதபுர நீதிமன்றத்திலிருந்து உடனடியாக வவுனியா நீதிமன்றத்திற்கு அல்லது யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு மாற்றப்படல் வேண்டும்.

• உடனடியாக அனைத்து அரசியல் கைதிகளையும் பாரிய குற்றச்செயல்களுடன் (கொலை, களவு, வன்புணர்வு, கடத்தல்) தொடர்புடைய குற்றவாளிகளுடன் தடுத்துவைப்பதை நிறுத்தி அவர்களிலிருந்து வேறுபடுத்தி பாதுகாப்பான சிறைகளில் தங்குவதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

• அனைத்து தமிழ் அரசியல்கைதிகளின் வழக்குகளும் உடனடியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

• ஏற்கனவே இக் கைதிகள் பல வருடகாலமாக கிட்டத்தட்ட 10-15 வருடங்களுக்கு மேலாக சிறைத்தண்டனையையும் சிறைக்குள் பல சித்திரவதைகளையும் தண்டனையாக அனுபவித்தமை காரணமாக எந்தவித நிபந்தனைகளுமின்றி துரித கதியில் "நிபந்தனைகளுமின்றி விடுதலை" செய்யப்பட்டு சமூகத்துடன் இணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

• ஏற்கனவே வடக்கு-கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சிறந்த வாழ்வாதாரம் மற்றும் தொழில் வாய்ப்பு என்பவற்றில் அதிக கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும்.


குறிப்பு

• புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போராளிகளில் அங்கவீனராக இனங்காணப்பட்டவர்களுக்கு விசேடமான தொழில்வாய்ப்பு மற்றும் வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்என்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். (இ-4)



யாழ். தொண்டைமானாறு அக்கரை கடற்கரையில் இருக்கும் சுற்றுலா மையத்தை அகற்றி அதைச் சிறுவர் விளையாட்டுத் திடலாக மாற்றம் செய்யுமாறு கோரி 30 நாட்களையும் தாண்டி நீராகாரம் மாத்திரம் உட்கொண்டு உணவுத் தவிர்ப்புத் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. கா. செந்திவேல் சந்தித்து உரையாடியதுடன் குறித்த சுற்றுலா மையத்தையும் பார்வையிட்டார்.

## கதிரைகள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்) சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு தனது 2017ஆம் ஆண்டுக்கான வடமாகாணசபையின் ஒதுக்கீட்டின் கீழ் ரூ.75,000 பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் செல்வஸ்தான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கினார். (இ-7)

## பிரசன்ன சஞ்சீவவுக்கு பிணை

மேல் மாகாண சபை உறுப்பினர் பிரசன்ன சஞ்ஜீவவை பிணையில் விடுவிக்க நேற்று களுத்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

[illegible] நகரில் அரச வைத்தியர்களின் கட்டளைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் பிரசன்ன சஞ்ஜீவ அளுத்கம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஒருவரை வைத்தியசாலைக்கு அழைத்து வந்த வேளை, அவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை எனக் கூறி, மாகாண சபை உறுப்பினர் உள்ளிட்ட குழுவினர் வைத்தியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்க முற்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவரை பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு தொடர்பில் விளக்க தேரர்களைச் சந்திக்கிறது சு.க



(கொழும்பு)

எல்லா மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்புத் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என அக்கட்சியின் பொதுச் செயலாளரும் விவசாயத் துறை அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னைய சந்தர்ப்பமொன்றிலும் கூட, மகாநாயக்க தோர்களைச் சந்தித்து இது தொடர்பாகக் கலந்துரையாடினோம்.


புதிய அரசமைப்புத் தொடர்பில் அச்சந்தர்ப்பத்தில் நாங்கள் விளக்கமளித்தோம். அவர்கள், தங்களது பற்றுறுதியை வெளிப்படுத்தினர்.

"வேறு சிலர் சென்று தவறான தகவல்களை அவர்களிடம் கூறிய போது, அவர்கள் அவற்றை ஏற்றுக் கொண்ட சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன" என்று அவர் கூறினார்.

இது தொடர்பான உண்மை நிலவரம் குறித்து, விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்பார்க்கிறது என்று தெரிவித்த அவர், பௌத்தத்துக்கு வழங்கப்படும் முன்னுரிமைக்கு எவரும் எதிராக இல்லை என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் பிரதான கட்சிகளுள் ஒன்றாக, உண்மையான நிலைமை குறித்து மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளிக்க சுதந்திரக் கட்சி கடமைப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மியன்மாரிலிருந்து யானை கொண்டுவந்ததில் 251 மில்லியன் ரூபாய் மோசடி



(கொழும்பு)

தலதா மாளிகைக்கு மியன்மாரிலிருந்து யானையொன்றைக் கொண்டு வருவதற்காக 251 மில்லியன் ரூபாய் மோசடி இடம்பெற்றுள்ளதென விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. திறந்த சந்தையில் 10 முதல் 15 மில்லியன் ரூபாய்க்குப் பெற்றுக்கொள்ள வேண்டிய யானைக்கு 261 மில்லியன் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

யானைகளைப் பதிவு செய்தல் மற்றும் பெற்றுக் கொள்ளப்படுவது தொடர்பில் இடம்பெற்றதெனக் கூறப்படும் மோசடிகளை விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்த உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் நிமல் எட்வர்ட் திஸாநாயக்க பங்கெடுத்த ஆணைக்குழு, நிலையான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவுக்கு இது குறித்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையின் பிரகாரம், 2007ஆம் ஆண்டு, யானையைப் பெற்றுக் கொண்டமைக்காக குறித்த பணம் சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதெனத் தெரிய வந்துள்ளது. இந்தப் பணப்பரிமாற்றலுடன் தொடர்புடைய அதிகாரி தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு, அந்த ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, 2011 முதல் 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் காடுகளிலிருந்து சட்டவிரோதமான முறையில் யானைகளைப் பிடித்து வர்த்தகர்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அரசியல் சார்ந்தோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. (இ-7)

# அரசாங்கம் தேர்தலுக்கு அஞ்சுகிறது

## தினேஷ் எம்.பி.



தற்போதைய அரசாங்கம் தோல்விக்கு அஞ்சித் தேர்தலை பிற்போட்டு வருவதாகக் கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தெல்தெனிய பகுதியில் கட்சி ஆதரவாளர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சியொன்றில் நேற்று கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1226

Search for people, places and things Nagendram Home

### சுகன்யா




மனைவியுடன் இரு சக்கர வாகனத்தில் போகும்போது அசல் திருமண சான்றிதழ் கொண்டு வரவும். இல்லையெனில் மனைவி பறிமுதல் செய்யப்படும்.

அரசாங்கம் அறிவிப்பு

### கஸ்தூரி





### சங்கீதா




### திவ்யன்




### சுகர்ணன்




### தேவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாறும் உலகில் புலம்பெயர் தமிழர்கள்





உலகம் எங்கும் பரந்து வாழும் சமுதாயம் என்பதில் பெருமை கொண்டு வாழ்வது, தமிழ் சமுதாயம் ஆகும்.

உள்நாட்டு யுத்தத்தால் ஈழத் தமிழர்கள் நாடுகள் பல கடந்து வாழ்கின்றனர். ஆனால், பல பத்தாண்டுகளுக்கு முன்னர் தமிழகத்திலிருந்து வேலையாட்களாகவும் போர் வீரர்களாகவும் இடம்பெயர்ந்த தமிழர்கள் இன்று அந்தந்த நாடுகளிலேயே தேசியம் பேசும் சுதேசிகளாக மாறி வாழ்கின்றனர்.

உதாரணமாக மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸ் உள்ளிட்ட பல நாடுகளில் உள்ள தமிழர்கள் தற்போது தமது மூதாதையர் குடி பெயர்ந்து வாழ்ந்த நாடாக தாம் வாழும் நாட்டை பாராட்டுகின்றனர். அவர்கள் எல்லோரது பரம் பரைகளும் முன்பு ஒருகாலத்திலே பாக்கு நீரிணை சார்ந்ததாகவே இருந்திருக்கிறது.

காலப்போக்கில் இதே மக்கள் தமிழக அரசியலிலோ அல்லது இலங்கை அரசியலிலோ தலையிடுவது, வெளிநாட்டு அரசியலில் தாம் தலையிடுவது நல்லதல்ல என்ற மனப்பாங்கை கொண்டிருப்பதை பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

காலனித்துவ காலத்தில் ஒல்லாந்தர்களாலும் போர்த்துகீசர்களாலும் பிரான்சியர்களாலும் பிரித்தானியர்களாலும் தமிழ் தொழிலாளர்கள் இந்து சமுத்திரத்தை அண்டிய தீவுகளுக்கும் இதர சமுத்திரங்களில் அமைந்திருந்த காலனித்துவ நிலைகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்கள் இன்று புலம் பெயர்ந்தவர்களாக அல்லாது அந்த காலனித்துவ நிலைகளையே தமது சொந்த தேசமாக எண்ணி வாழ்கின்றனர்.

ஆனால் தற்போது சர்வதேச அரசியல் நிலை மாறிய போக்கிற்கு ஏற்ப இந்திய மத்திய அரசில் இருக்கும் கொள்கை வகுப்பாளர்கள் கிழக்குப் பார்வை (Look East) என்ற அயலுறவுக் கொள்கை பதத்தின் அடிப்படையில் ஆசியான் நாடுகளுடன் நல்லுறவை வைத்து கொள்ளும் நோக்கத்திற்கு இந்திய வம்சாவளியினரை தமது கொள்கைகளுக்கான காரணிகளில் ஒன்றாக காட்ட முனைகின்றனர்.

இந்தியா சார்பான, கிழக்காசிய சர்வதேச அரசியலின் விதியை நிர்ணயித்தவர்களாக **The norm-builders** இந்திய வம்சாவளியினரை, இந்திய கொள்கை வகுப்பாளர்கள் பார்க்கின்றனர்.

காலனித்துவ காலத்தில் கிழக்கு நாடுகளில் குடியேறிய தென் இந்திய அல்லது இலங்கை தமிழ் இனத்தவர்கள், இந்திய பண்பாட்டை அந்த நாடுகளில் மகிழ்வும் வீரியமும் மிகக்கொண்டு பாராட்டி வருகின்றனர். ஆனால் தற்கால இந்தியா இதே மக்களை பண்பாட்டு தொடர்பாளர்களாக மட்டுமல்லாது, இராஜதந்திர தொடர்புகளுக்கான காரணிகளாகவும் உபயோகிக்கிறது.

தமது தாயகமாக குறிப்பாக மலேசியா,சிங்கப்பூர், பிஜி போன்ற நாடுகளில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் புலம் பெயர் மக்கள் என்ற நிலையிலிருந்து வேறுபட்ட நிலையை அடைந்திருப்பதை கவனிக்கக்கூடியதாக இருக்கிறது. நாம் இருக்கும் தேசம் எம்மால் கட்டியெழுப்பப்பட்டது என்ற உரிமை அவர்களுக்கு இந்த எண்ணப்பாட்டை உருவாக்கி இருக்கிறது. இவர்களது பண்பாடு தேசத்துக்கு ஏற்றாற்போல் அங்கு கிடைக்கப்பெறும் வளங்களுக்கு ஏற்றாற்போல் மாறியுள்ளது.

ஆனால் 1980 களிலும் 1990 களிலும் அதற்குப் பிறகும் இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் கடந்த ஒகஸ்ட் மாதம் கனேடிய தேசத்தில் ரொறன்ரோ நகரில் மிக விமரிசையாக நடத்திய தெருவிழா இந்திய ஊடகங்களின் கவனத்தை ஈர்த்திருப்பதை காணக்கூடியதாக இருந்தது. இந்த தெருவிழா இந்திய தேசிய அல்லது இலங்கை தேசிய பண்புகளுக்கு அப்பால் தமிழ் தேசியத்தை பிரதிபலிக்கும் தன்மையை கொண்டிருந்தது.

புலம்பெயர் தமிழர்களின் இந்த தெருவிழா, மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸ் போன்ற நாடுகளில் காலனித்துவ காலத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மதம் சார்ந்து விழாக்கள் எடுப்பது போல் அல்லாது மாறுபட்டதாக தெரிகிறது.

கனேடியப் பிரதமர் மட்டத்தில் செல்வாக்கு செலுத்தும் விழாவாக இது காணப்பட்டது. இந்த விழாவானது இந்திய- இலங்கை ஆட்சி தரப்பு சிந்தனையாளர்கள் மட்டத்தில் நிச்சயம் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய விழாக்களும் காலப் போக்கில் அடுத்தடுத்த பரம்பரைகளின் கைக்கு போனதும் ஈழத் தமிழர் தேசியம் என்ற பார்வை மாறிப்போய், கனடாவில் தமிழர் பாரம்பரியத்தின் சிறப்பு என்பதாக அமைந்து போகும் என்ற ஐயம் உள்ளது. ஏனெனில் அங்கே கனேடிய தேசியத்தை வளர்ப்பதிலும், பல் சமுதாய தனித்துவத்தை கொண்ட கனேடிய தேசியத்தில் தமிழ்ச் சமுதாயத்தின் அடையாளம் என்ற நிலையை காட்டும் தன்மை அதிகமாக உள்ளதான பார்வை ஒன்றுள்ளது.

இந்த பார்வையைக் கருத்தில் கொண்டு புலம்பெயர் மக்கள் மத்தியில் தாயக தேசியம் எவ்வாறு பேணப்படுகிறது என்பது குறித்து பல்வேறு சமுதாயங்கள் குறிப்பாக புலம்பெயர் சைப்பிரஸ் மக்கள், புலம் பெயர் இத்தாலிய மக்கள், புலம் பெயர் யூதமக்கள் ஆகிய சமுதாயங்கள் மத்தியிலும் அமைந்துள்ள திட்டங்கள் குறித்து ஆராயப்பட்ட போது யூதர்களின் திட்டம் ஒன்று மிகவும் பொருத்தமான ஒன்றாக தெரிகிறது.

இதைவிட மேலும் பல இலாப நோக்கம் அற்ற நிறுவனங்கள் தத்தமது சமுதாயத்தின் மத்தியில் பரீட்சார்த்தமாக தமது நாடுகளில் இருந்து வெளியேறிய புலம்பெயர் மக்களை பொருளாதார, அரசியல், பண்பாட்டு விடயங்களை கையாளும் வகையிலான சந்தர்ப்பங்களை உருவாக்கும் சேவையை செய்து வருகின்றன.

தாயகத்துடன் புலம்பெயர் மக்



களை இணைக்கும் மூலோபாயங்களில் **Taglit - Bright right** என்ற அமைப்பினால் இளம் யூத சமுதாயத்தினரை பிறந்த நாட்டு தேசிய வாழ்விலிருந்து புலம்பெயர் தேசிய வாழ்வு மனோநிலைக்கு கொண்டு வரும் மூலோபாய திட்டம் **Diasporization strategy** வகுக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு வருகிறது.

சமூக கட்டுமானத்தை உருவாக்குதல், மீள் தயார்படுத்தல், புலம்பெயர் மனோபாயியல் அடையாளத்திற்கு மாற்றி அமைத்தல் போன்ற சேவைகளில் இந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது.

தாய்நாட்டில் சுற்றுலா பயணம் என்ற வகையிலான முயற்சியின் ஊடாக புலம்பெயர் சமுதாய தேசிய அடையாளத்தை கட்டி அமைத்தல் எனும் இந்த முயற்சி, சர்வதேசம் எங்கும் எல்லைகள் கடந்து பரந்து வாழும் புலம்பெயர் இளைய சமுதாயத்தினரை அவரவர் பிறந்த நாடுகளில் ஏற்கனவே பரீச்சயம் ஆகிவிட்ட தேசிய வாழ்க்கை, பண்பாடு ஆகியவற்றிலிருந்து தமது தாய் தந்தையர் அல்லது முன்னோர்கள் வாழ்ந்த தாய்நாட்டிற்கு இயல்பு மாற்றம் பெறவைக்கக்கூடியதான தாகும்.

இதன் வெற்றியின் அளவு குறித்த ஐயப்பாடுகள் ஆரம்பத்தில் பல்வேறு கருத்து வேறுபாடுகளை கொண்டிருந்தாலும், நிகழ்காலத்தில் இளையவர்கள் மத்தியிலும், மத்திய தர வயதினர் மத்தியிலும் மிகவும் தாக்கம் விளைவிக்கக் கூடியதாக இருப்பதாக இந்த தாய் நாட்டு சுற்றுலா சென்று வந்தவர்களிடம் இருந்து பெறப்பட்ட நேர் காணல் புள்ளிவிபரத் தகவல்கள் காட்டுகின்றன.

தொண்ணூறுகளில் யூதர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஒரு புள்ளி விபரக் கணிப்பீட்டின்படி இளம் சமூகத்தினர் வேறு சமூகத்து துணைகளைத் தேடிக் கொள்வதில் அதிக நாட்டம் காண்பது தெரிந்து கொள்ளப்பட்டது. இதனால் யூத இனத்தின் தொடர்ச்சி கேள்விக் குரியதாக உருமாறுவதாக அந்த இன ஆய்வாளர்கள் சிலர் அறிக்கைகள் தயாரித்தனர்.

இந்த அறிக்கைகளிலே மாற்று இனங்களுக்குள் திருமணம் புரிதல் சமூகத்திற்கு மிகவும் தாக்கம் விளைவிக்கும் காரணிகளில் ஒன்றாக பார்க்கப்பட்டது. சமய வழிபாட்டு முறைகளின் அறிவு மிகவும் வீழ்ச்சியை கண்டு வருவது கண்டறியப்பட்டது. மொழியின் எதிர்காலம் மிகப்பெரும் தாக்கத்துக்கு உள்ளாகியது.

இதன் பொருட்டு சமூக ஆர்வலர்களால் பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. பலர் மேலை நாடுகளில் யூத சமூக வளர்ச்சியை சீர்படுத்தும் விதமாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர். இதன் மூலம் சமூகக் கல்விக்கான பல்வேறு சலுகைகள் உருவாக்கப்பட்டன. இதைவிட மேலும் பல திட்டங்கள் முன் கொண்டு வரப்பட்டன.

குறிப்பிட்ட இந்த முயற்சி இஸ்ரேலை நோக்கியது ஆகும். **Taglit -Brightright** என்ற வட அமெரிக்க யூத சமூக அமைப்பினால் தமது இனத்தில் உள்ள 18 வயதிலிருந்து 26 வயதான இளைஞர், யுவதிகளை இஸ்ரேலுக்கு கொண்டு சென்று யூதாவியல் **(Judaism)** சமயக் கருத்துகளை கூறுதல், பண்பாடு குறித்த விளக்கங்களை தெளிவுபடுத்துதல், கலாசார விளக்கங்களை கூறுதல்என்பன உட்பட யூத வரலாறு, அவர்களுடைய தற்கால வளர்ச்சி, ஆகியவற்றுடன் யூத சரித்திரத்தில் இடம் பெற்ற பல்வேறுபட்ட ஞாபகார்த்த இடங்கள் குறித்த விளக்கச் சித்திரிப்புகள் ஆகியன முக்கிய பங்கு வகிக்கின்றன.

மேலும் வாழ்க்கைச் சரித்திரங்கள், சம்பவங்கள் குறித்த விளக்கங்களை மனம் உருகும் வகையிலாக சித்திரித்தல் என்பன இங்கே இடம் பெறுகிறது. இதிலே முக்கியமானது இஸ்ரேலிய சியோனிசத்தின் உயிரோட்டத்தை சித்திரிக்கும் சம்பவங்களான மசடா மலையின் கதைகள் பெருமாற்றத்தை ஏற்படுத்துவதாக இந்த தேசிய மாற்ற பயணத்தில் ஈடுபட்ட பல பயணிகள் கூறியுள்ளனர்.

மசடா மலையில், கிறிஸ்தவ வேதாகம நூல் காலத்தில் யூத ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக எதிரியின் சுற்றி வளைப்புக்குள் ஆளாகிய போது அவர்கள் கூட்டாக தற்கொலை செய்வது என்றும் எதிரியிடம் பிடிபடக் கூடாது என்றும் முடிவெடுத்தனர். இதன்போது இடம்பெற்ற சோக நிகழ்வுகளின் சித்திரிப்பும், அங்கே ஆதிகால யூதர்களால் பாவிக்கப் பட்ட நூதனப் பொருட்களும் ஆதாரமாக காட்டப்படுவதும் இந்த தேசிய மனமாற்றத்திற்கான காரணமாக கூறப்படுகிறது.

மசடா மலையின் மகத்துவம் பற்றி அங்கே மேலைநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு யூத இளைஞர்,யுவதிகள் மத்தியில் இன்றும் இஸ்ரேலிய அரசின் பாதுகாப்பும், யூத மக்களின் சுதந்திரமும் அவர்களுக்கான பாதுகாப்பின் உறுதிப்பாடும் எவ்வளவு அவசியம் என்பதை உணர்த்தும் வகையில் இனியும் ஒருமுறை மசடா மலை எதிரியின் கைகளில் வீழ்ந்து விடாது பாதுகாப்பது நம் எல்லோரதும் கடமை.

மீண்டும் ஒருமுறை யூதர்களின் வாழ்க்கை அழிவுக்கு உள்ளாவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று எல்லோரும் சத்தியம் செய்து கொண்டு அவர்களது பயணம் தொடர்கிறது. மேலும் தனிப்பட்டவர்களின் கதைகளும் இங்கே சொல்லப்பட்டு புலம்பெயர் யூத இளம் சமுதாயத்தை இஸ்ரேலிய தேசியத்தின் பால் வைத்திருப்பதற்கு மிகப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.


நிலை மாறும் உலகிற்கு ஏற்றவாறு இங்கே பல்வேறு புலம்பெயர் சமுதாயங்களும் தமது தேசியத்தையும் அதன் உயிர்வாழ்வையும் பாதுகாப்பதில் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிலையில் தமிழ் சமுதாயம் மட்டும் போகும் இடம் எல்லாம் தமது தேசியத்தையும் மொழியையும் பறிகொடுத்து செல்வது சரியானதாக தெரியவில்லை.

லோகன் பரமசாமி - புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லாத அரசியலமைப்பு குறித்து பொய்களைக் கூறி மக்களை குழப்பாதீர்

## பிரதமர் ரணில் கோரிக்கை



(கொழும்பு)

**இல்லாத அரசியலமைப்பு குறித்து பொய்யான கருத்துக்களைப் பரப்ப வேண்டாம். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் உண்மைகளைத் தெரிந்து கொண்டு விமர்சிக்க வேண்டும். நாட்டில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நிலையில் மக்களைக் குழப்ப வேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.**

கடந்த ஆண்டு ஏற்பட்ட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் நிகழ்வு அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அனர்த்தங்களில் பாதிக்கப்படும் மக்களை பாதுகாக்க விரைவான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். நாம் இன்றும் நவீன வசதிகளை பயன்படுத்தாததன் காரணமே இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் அதிகளவில் முகங்கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. எனினும் அனர்த்தங்கள் குறித்து மாற்று வேலைத்திட்டங்களை வெகு விரைவில் நாம் முன்னெடுப்போம். மக்களை பாதுகாக்கும்தரமான வேலைத் திட்டங்களை நாம் சர்வதேச நாடுகளுடன் இணைந்து முன்னெடுப்போம்.

கடந்த ஆண்டில் அனர்த்தத்தில் மாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நாம் 1.3 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். அதன் ஒருகட்டமாக இப்போது தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு நாம் நிதி உதவிகளை வழங்குகின்றோம். இந்த ஆண்டு இறுதிக்குள் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நாம் நிவாரணங்களை வழங்கி மக்களின் நிலைமைகளை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

சர்வதேச நாடுகளின் மூலமாகவோ சர்வதேச வங்களின் மூலமாகவும் நாம் கடன்களையும், உதவிகளையும் பெற்று இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

சர்வதேச நாடுகளில் இவ்வாறான நிலைமைகளில் எல்லாம் ஊடகங்கள் அனர்த்தங்கள் குறித்த வேலைத் திட்டங்கள் தொடர்பிலேயே அதிகளவில் முக்கியத்துவம் கொடுக்கின்றன. எனினும் இன்று எமது நாட்டில் அதிகளவில் அரசியலமைப்பு குறித்து மட்டுமே அனைத்து ஊடகங்களும் பேசுகின்றன. நாம்முன்னெடுக்கும்வேலைத் திட்டங்களை நாட்டினை பிளவுபடுத்த போவதாக ஊடகங்கள் கூறுகின்றன. மாநாயக தேரர்களை குழப்பத்தில் ஆழ்த்தும் வகையிலும் ஊடகங்கள் கருத்துக்களை முன்வைத்து நாட்டின் நல்லிணக்கத்தை சிதைவடையச்செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

உருவாக்கப்படாத ஒரு அரசியலமைப்பு குறித்து பொய்யான கருத்துக்களை பரப்ப வேண்டாம். இன்னும் அரசியல் அமைப்பின் ஆரம்ப நடவடிக்கையேனும் முன்னெடுக்காத நிலையில் இல்லாத அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டதாகவும் அது மோசமான ஒன்றாகவும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. இப்போது அரசியலமைப்பு குறித்து கருத்துக்கள் முன்ல்வக்க வேண்டிய அவசியம் இல்லை.

பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு சபை உருவாக்கப்பட்டு இந்த விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. நாட்டிற்கு பொருத்தமான, பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்தே இன்றும் நாம் பாராளுமன்றத்தில் கலந்தாலோசித்து அதில் உள்ள முரண்பாடுகளை ஆராய்ந்து தீர்மானம் எடுத்து வருகின்றோம்.

புதிய அரசியலமைப்பு குறித்து தத்தமது கட்சிகளின் கருத்துக்களை முன்வைத்து விவாதம் செய்யவும் நாம் சகல அரசியல் கட்சிகளுக்கும் வாய்ப்புகளை வழங்கியுள்ளோம். இதனை சரியான வாய்ப்பாக பயன்படுத்தி கட்சிகளும் தமது நிலைப்பாடுகளை முன்வைக்க வேண்டும். நாம் அரசியலமைப்பினை உருவாக்கும் போது அது குறித்த சரியான தெளிவினை பெற்றுக்கொண்டு அதன் பின்னர் அரசியலமைப்பு குறித்து விமர்சனங்களை முன்வைக்க வேண்டும். அதற்கான காலம் இதுவல்ல. சகலரும் தமது நிலைப்பாடுகளை, காரணிகளை, ஆலோசனைகளை, பிரேரணைகளை முன்வைக்க சரியான காலம் கிடைக்கும். அனைவரதும் இணக்கத்தில் பொதுவான ஒரு அரசியலமைப்பு உருவாக்க முடியும்.

நாம் அரசியலமைப்பு குறித்த நிலைப்பாட்டினை முன்வைத்த பின்னர் அதில் முரண்பாடுகள் இருக்குமாயின் அவற்றை வைத்துக் கொண்டு எம்மீதான விமர்சனங்களை முன்வையுங்கள். ஆனால் உருவாக்கப்படாத ஒரு விடயம் குறித்து பொய்யான தகவல்களின் பிரகாரம் இவ்வாறு அரசாங்கத்தை குழப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம். மக்களை ஒன்றிணைக்கவும் நாட்டினை கட்டியெழுப்பவும் பல வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும்.

நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. மக்களின் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு அவற்றினை சரிசெய்ய வேண்டும். அவ்வாறு இருக்கையில் தேவையற்ற கருத்துக்களை முன்வைத்து மக்களை குழப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மைத்திரியின் மகளுக்கு 3கோடி வழங்கப்பட்டதா?

## வெளியான தகவலால் சர்ச்சை



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகளுக்கு 3 கோடி ரூபாய் வழங்கப்பட்டதாக போலிப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி சுகததாஸ விளையாட்டு அரங்கில் கிராம சக்தி என்ற நிகழ்வொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வின் பிரசார நடவடிக்கைக்காக 3 கோடி ரூபா, ஜனாதிபதியின் மகள் சதுரிகா சிறிசேனவின் மீடியா பெக்ட்ரி என்ற பிரசார நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

எனினும் அது முற்றிலும் போலியான செய்தி என ஜனாதிபதி சிரேஷ்ட இணைப்பு அதிகாரி சட்டத்தரணி சிறிரால் லக்திலக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

20ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்விற்கும், சதுரிகா சிறிசேனவுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என அவர் தெரிவித்தார்.

அந்த நிகழ்விற்கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் ஜனாதிபதி ஊடக பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு பிரதானி தர்மசிறி தெரிவித்துள்ளார்.

குறித்த நிகழ்விற்கான தொலைக்காட்சி பிரசாரம் மாத்திரம் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# குற்றவாளிகள் பரிமாற்றம் குறித்து இலங்கை-ஈரான் உடன்படிக்கை



(கொழும்பு)

குற்றவாளிகளைப் பரிமாறிக் கொள்வது தொடர்பில் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஈரானிய தலைநகர் டெஹ்ரானில் நேற்று முன்தினம் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை இரு நாடுகளுக்கு இடையில் பரிமாறிக் கொள்வது குறித்து இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் அனிஸ் சய்யாடி மற்றும் ஈரானிய நீதி அமைச்சர் அலிரீசா அவாவி ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை சகல வழிகளிலும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அந்நாட்டு நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரைவில் ஈரானுக்கு பயணம் செய்வார் என அனிஸ் சய்யாடி தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அனுபவமே ஆசான்!

ஓர் இளைஞன் பாலை வனம் ஒன்றைக் கடக்க எண்ணி, தன்னைப் போன்ற மன உறுதிமிக்க நண்பர்கள் பலரைத் துணைக்கு அழைத்துக் கொண்டான். அவர்களிடம், “நம்மோடு முதியவர்கள் யாரும் வரக்கூடாது. அவர்களது உதவியும் தேவையில்லை” என்று கூறிப் பயணத்தைத் தொடங்கினான். அவரவரும் தமக்குத் தேவையான பொருட்களைச் சுமந்து கொண்டு அவனோடு சென்றனர்.

பல நாட்களாகப் பயணம் செய்த பின்பும் பாலைவனத்தைக் கடந்து செழிப்பான இடத்துக்கு அவர்களால் வர இயலவில்லை. இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்றும் அவர்களுக்குத் தெரியவில்லை. கொண்டு வந்த உணவும் நீரும் தீர்ந்து கொண்டிருந்தன.

மேலும் இந்தப் பாலைவனத்தை எப்படிக் கடப்பது என்ற கவலை வேறு அனைவரையும் தொற்றிக் கொண்டது. எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்கவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு திகைத்துப் போனார்கள்.

ஒருவன் மட்டும் சற்று தூரம் ஒதுங்கிப் போனான். சிறிது நேரம் கழித்து வந்தவன், நேராகத் தலைவனிடம் போனான். “இன்னும் கொஞ்சத் தூரத்தில் தண்ணீர் கிடைக்கும” என்று உறுதியாகக் கூறினான். எல்லோருக்கும் வியப்பாகப் போய் விட்டது. “எங்களோடு வந்த உனக்கு மட்டும் இது எப்படித் தெரிந்தது?” என்று கேட்டனர்.

முதலில் சொல்லத் தயங்கிய அவன், நண்பர்களின் வற்புறுத்தல் காரணமாக, “நான் எங்கு சென்றாலும் என் வயதான தந்தையை அழைத்துச் செல்வேன். அல்லது ஆலோசனை கேட்டுச் செல்வேன். இப்போது இந்தப் பெட்டியில் அவரை வைத்துச் சுமந்து கொண்டு தான் வந்தேன்.





அவரிடம் கேட்டபோது, வெளியே வந்து சுற்றிலும் பார்த்தார். ஒரு பறவை பறந்து சென்றதைக் கண்டார். “இப் பறவை நீர்நிலை இருக்கும் இடத்தில்தான் வாழும். அதனால் அருகில் நீர்நிலை நிச்சயம் இருக்கும்” என்றார்.

அதைத்தான் நான் உங்களிடம் வந்து சொன்னேன்”என்றான்.

தலைவனான நண்பன், அனுபவமே சிறந்த ஆசான் என்பதையும் வயதானோர் ஆலோசனைகளை மதிக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டான்.




- ◆1260 - சார்ட்டேர்ஸ் கதீட்ரல் பிரான்சின் ஒன்பதாம் லூயி மன்னனால் திறந்து வைக்கப்பட்டது.
- ◆1260 - எகிப்திய சுல்தான் சாயிஃப் ஆட்-டின் குத்தூஸ், பாய்பேர்ஸ் என்பவனால் கொலை செய்யப்பட்டான். பாய்பேர்ஸ் நாட்டின் சுல்தான் ஆனான்.
- ◆1648 - வெஸ்ட்ஃபாலியா அமைதி ஒப்பந்தம் முப்பதாண்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.
- ◆1801 - மருது பாண்டிய சகோதரர்களும் அவர்கள் குடும்பத்தைச் சேரந்த 500இற்கும் மேற்பட்ட மன்னர் குடும்பத்தாரும் வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்டனர்.
- ◆1806 - பிரெஞ்சுப் படைகள் பெர்லின் நகரை அடைந்தன.
- ◆1851 - யுரேனஸ் கோளின் சந்திரன்கள் ஏரியல், உம்பிரியல் ஆகியன வில்லியம் லாசெல் என்பவாரால் கண்டறியப்பட்டது.
- ◆1857 - உலகின் முதலாவது கால்பந்தாட்ட அணியான ஷெஃபீல்ட் கால்பந்தாட்ட அணி இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- ◆1912 - முதலாம் பால்க்கன் போர்: குமனோவா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் சேர்பியா வெற்றி பெற்றது.
- ◆1917 - ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி இடம்பெற்றது.
- ◆1929 - கறுப்பு வியாழன்: நியூயோர்க் பங்குச் சந்தையில் பங்குகள் சரிவு.
- ◆1930 - பிரேசிலில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது. ஜனாதிபதி "லூயிஸ் பெரெய்ரா டெ சயூசா" பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- ◆1931 - ஜோர்ஜ் வாஷிங்டன் பாலம் திறக்கப்பட்டது.
- ◆1935 - இத்தாலி எதியோப்பியாவைக் கைப்பற்றியது.
- ◆1943 - நாடு கடந்த இந்திய அரசு முறைப்படி பிரித்தானியா மீதும் அமெரிக்கா மீதும் போரை அறிவித்தது.
- ◆1945 - ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- ◆1960 - சோவியத் ஒன்றியத்தின் பாய்க்கனூர் விண்தளத்தில் R-16 ஏவுகணை வெடித்ததில் 100 பேர் கொல்லப்பட்டனர்.
- ◆1994 - கொழும்பில் தேர்தல் கூட்டத்தில் நடந்த குண்டு வெடிப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்கா மற்றும் 51 பேர் கொல்லப்பட்டனர்.
- ◆2003 - கான்கோர்டு விமானம் தனது கடைசிப் பயணத்தை மேற்கொண்டது.

பிறப்புகள்

- ◆1921 - ஏ. கே. வேலன், தமிழக எழுத்தாளர்
- ◆1924 - சி. கதிரவேலுப்பிள்ளை, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1981)
- ◆1954 - மால்கம் டேர்ன்புல், அவுஸ்திரேலியாவின் 29 ஆவது பிரதமர்
- ◆1957 - இ.ஜெயராஜ், இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்
- ◆1971 -மல்லிகா செராவத், இந்திய நடிகை
- ◆1983 - தீபச்செல்வன், ஈழத்து எழுத்தாளர், ஊடகவியலாளர்

இறப்புகள்

- ◆1601 - டைக்கோ பிராகி, டென்மார்க் வானியலாளர் (பி. 1546)
- ◆1801 - மருது பாண்டியர், இந்திய சுதந்திர போராட்ட வீரர்
- ◆1870 - அந்தோனி மரிய கிளாரட், எசுப்பானிய, கத்தோலிக்க மறைபோதகர் (பி. 1807)
- ◆1953 - மு. கதிரேசச் செட்டியார், தமிழறிஞர் (பி. 1881)
- ◆1981 - எடித் எட், அமெரிக்க ஆடை வடிவமைப்பாளர் (பி. 1897)
- ◆1994 - காமினி திஸாநாயக்கா, இலங்கை அரசியல்வாதி (பி. 1942)
- ◆2005 - றோசா பாக்ஸ், அமெரிக்க செயற்பாட்டாளர் (பி. 1913)
- ◆2006 - தரம்பால், இந்திய காந்தியவாதி, வரலாற்று ஆய்வாளர் (பி. 1922)
- ◆2013 - மன்னா தே, இந்தியப் பாடகர் (பி. 1919)
- ◆2014 - தேனுகா, கலை, இலக்கிய விமர்சகர்
- ◆2014 - எஸ். எஸ். ராஜேந்திரன், திரைப்பட நடிகர் (பி. 1928)

சிறப்பு நாள்

- ◆விடுதலை நாள் (சாம்பியா, 1964)
- ◆ஐக்கிய நாடுகள் நாள்



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 200 | 120 | 140 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 350 | 500 | 380 |
| தக்காளி | 180 | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 80 | 60 | 50 |
| கோவா | 140 | 200 | 140 | 120 | 120 |
| கரட் | 100 | 200 | 100 | 200 | 90 |
| பூசணி | 60 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 100 | 120 | 80 | 120 | 90 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 160 | 90 |
| சின்ன வெங்காயம் | 240 | 300 | 240 | 300 | 260 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 120 | 200 | 140 |
| பாகற்காய் | 400 | 600 | 350 | 400 | 380 |
| வெண்டிக்காய் | 120 | 200 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 160 |
| பயற்றங்காய | 180 | 200 | 170 | 160 | 220 |
| லீக்ஸ | 150 | 280 | 200 | 240 | 100 |
| பீற்றூட் | 100 | 160 | 100 | 120 | 100 |
| கறிமிளகாய் | 300 | 250 | 260 | 240 | 280 |
| முருங்கைக்காய் | 350 | 250 | 240 | 300 | 400 |
| போஞ்சி | 250 | 250 | 140 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 140 | 120 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 200 | 120 | 240 | 300 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 85 | 100 | 75 | 80-100 | 300 |
| இராசவள்ளி | - | 500 | - | - | 400 |
| வெங்காயப்பூ | 250 | 200 | - | 240 | 90 |
| முள்ளங்கி | 80 | 100 | - | 120 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | - | 60 | 80 | 60 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொண்டிக்குதிரைக்கு சறுக்கினது சாட்டு.
–தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதி மைத்திரி நன்மதிப்பை இழப்பார்

உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மூவரினதும் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது.

அவர்கள் விடயத்தில் ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெரும் கருசனை எடுத்ததாகத் தெரியவில்லை.

இன்று 29ஆவது நாளாக அவர்கள் மூவரும் ஆகாரத்தை ஒறுப்புச் செய்து வருகின்றனர். அவர்களின் கோரிக்கை கடுமையானதல்ல.

வவுனியா நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வந்த தமது வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்ற வேண்டாம். எங்களை வவுனியா நீதிமன்றிலேயே தொடர்ந்து விசாரிக்க வேண்டும்.

தமிழ் மொழியில் வழக்கும் விசாரணையும் நடப்பதே நல்லது என்பதுதான் மூன்று தமிழ் அரசியல் கைதிகளினதும் கோரிக்கை.

அவர்களின் கோரிக்கை நியாயமானது. இருந்தும் அது விடயத்தில் நல்லாட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

29 நாட்களாக உணவொறுப்புப் போராட்டம் நடத்தும் தமிழ் அரசியல் கைதிகள் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில்,

நொண்டிச்சாட்டுக்களை முன்வைப்பது நல்லாட்சியின் கபடத்தனம் எனலாம்.

நீதி அமைச்சர் வெளிநாடு சென்றுவிட்டார். வெளிநாட்டுக்கு சென்றுள்ள சட்டமா அதிபர் நாடு திரும்ப வேண்டும் என்றெல்லாம் கூறுவது எந்தவகையிலும் நியாயமானதல்ல.

தங்களை விடுதலை செய்யுங்கள் என்று தமிழ் அரசியல் கைதிகள் கேட்கவில்லை. மாறாக, வவுனியா நீதிமன்றில் நடந்து கொண்டிருந்த வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றாதீர்கள் தொடர்ந்தும் வவுனியா நீதிமன்றிலேயே எங்களுக்கான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே மூன்று தமிழ் அரசியல் கைதிகளினதும் கோரிக்கையாகவுள்ளது.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நீதியமைச்சர் இல்லை, சட்டமா அதிபர் வெளிநாடு சென்றுவிட்டார் என்று கூறுவது இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற உன்னதமான பதவிக்குரிய பதிலா? என்பதை அவர் சிந்தித்தாக வேண்டும்.

தமிழ் மக்கள் மீது விசுவாசம் உள்ளதாகக் காட்டுவதென்பது வேறு, பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதென்பது வேறு. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு சாதுவான மதத் தலைவர் போலத் தன்னைக் காட்டிக் கொள்கிறார்.

பிரச்சினைகளைத் தீர்க்காமல் காமராஜரின் பாணியில் ஆகட்டும் பார்க்கலாம் என்று கூறி விடயங்களைத் தட்டிக் கழிக்கிறார். இதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பது தான் உண்மை.

இப்போது அந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளும் உடல்நிலை பாதிக்கப்பட்டு சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

29 நாட்களாக அவர்களின் உணவொறுப்புப் போராட்டம் தொடர்கிறது. மிகச் சுலபமாக தீர்க்கக்கூடிய ஒரு விடயத்தை சிக்கல்படுத்திக் கொள்வது தமிழ் மக்களின் விடயத்தில் நல்லாட்சி நடிக்கிறது என்பதற்கான சான்றாதாரமாகும்.

தவிர, மூன்று தமிழ் அரசியல் கைதிகளில் யாருக்கு எந்த ஆபத்து ஏற்பட்டாலும் அதன் பின்னர் இரா.சம்பந்தர் எதிர்க் கட்சித் தலைவர் பதவியில் இருந்து கொண்டு அரசுக்கு ஆதரவு கொடுக்க முடியாமல் போகும்.

தமிழ் மக்களின் ஆத்திர மேலீடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதே இருக்கும் என்பதால் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தரும் இது விடயத்தில் அதிரடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

# முன்னாள் அமைச்சரின் இல்லத்தை முற்றுகையிட்ட மு.கா.ஆதரவாளர்கள்

(கொழும்பு)

அம்பாறை - அட்டாளைச்சேனை பிரதேச முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்களகிழக்குமாகாணமுன்னாள் சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஷீரின் இல்லத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமால் வாக்குறுதியளிக்கப் பட்ட தேசியப் பட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதியை தராமல் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்வது அட்டாளைச்சேனை பிரதேச மக்களை தொடர்ந்தும் ஏமாற்றும் செயலாகவே உள்ளதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இதனை எங்களால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாதெனமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மட் நஷீரிடம் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த முஹம்மட் நஷீர்,

பொறுமையை கடைப்பிடியுங்கள். தலைவர் எமக்கு தருவதாகச் சொன்ன தேசியப் பட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் நிச்சயம் எமக்குக் கிடைக்கும்.

அதற்கான காலம் கனிந்து விட்டது. ஆதரவாளர்களாகிய நீங்கள் இச் சந்தர்ப்பத்தில்தான் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும்.

இப்பொறுமைக்குப் பின்னால்தான் எமக்கு வெற்றி கிடைக்கும் என கூறியுள்ளார். (இ-7)

### பேர்பெச்சுவல் நிறுவனத்திடம்

## 20 ஐ.தே.க. உறுப்பினர்கள் இலஞ்சம் பெற்றதாக புகார்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய பேர்பச்சுவல நிறுவனத்திடம் இருபது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளதாக ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன், அந்த நிறுவனத்திடம் ஐக்கிய தேசியக் கட்சியின் சுமார் இருபது பேர் இலஞ்சம் பெற்று கொண்டுள்ளமைக்கான சாட்சியங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த ஊழல் மோசடியுடன் தொடர்புடைய நபர்களை அம்பலப்படுத்துவதற்கு, மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை மேலும் நீடிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இது குறித்து விசாரணை நடத்த வேண்டுமாயின் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சரியான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமாயின் ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டியது அவசியமானது என அவ் அமைப்பின் அழைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.(இ-7)

## கைதிகள் குறித்து மகிந்த கவலை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தங்காலை சிறைச்சாலைக்கு சென்றிருந்தார். இதன்போது அங்கிருந்த கைதிகளை சந்தித்து நலம் விசாரித்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு மகிந்த கருத்து வெளியிடுகையில்.

"புதிய நவீன சிறைச்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், மழைக்கு ஒழுகும் சிறைச்சாலைகளிலேயே கைதிகள் உள்ளனர்.

புதிய சிறைச்சாலை திறக்கப்பட்ட போதிலும் அங்கு இவர்கள் அனுப்பப்படவில்லை என்பது அநீதியான ஒரு செயலாகும்.

இப்படி ஒன்றை நிர்மாணித்து இவர்கள் அங்கு அனுப்பப்படாமல் இருப்பது ஏன் என எனக்கு புரியவில்லை. உடனடியாக இவர் கள் மாற்றப்பட வேண்டும்.

அம்பாந்தோட்டை சம்பவம் தொடர்பிலான அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு நாம் முகம் கொடுப்போம். நாம் இதற்கு முன்னர் இதனை விட பல்வேறு விடயங்களுக்கு முகம் கொடுத்துள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**நிஷேகம் என்பது எந்நிலையைக் குறிக்கும்?**

நிஷேக நிலை என்பது பெண் ணானவள் ருதுவாகி அடுத்த ருது அவளுக்கு வருவதற்கு முன்பு திருமணம் செய்து வைப்பதாகும். (தொடரும்)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

ஸ்ரீதேவி... இந்தப் பத்மாவதி வேறு யாரும் அல்ல. ராமாவதாரத்தில் நீ சீதையாக இருந்தபோது வேதவதியாகிய இவள் கரத்தைப் பற்றி என் கரத்துடன் இணைக்கத் துடித்தாயே. நினைவில்லையா? அந்த வேதவதியே இந்த பத்மாவதி. கலியுகத்தில் ஸ்ரீநிவாசனாக வந்து இவளை மணமுடிப்பதாக அன்று ஏகபத்தினி விரதனான நான் வாக்களித்தேனே. மறந்துவிட்டாயா? உன் மனம் மகிழவே இந்த மங்கையை மணந்தேன்" என்றான்.

அது கேட்டு திருமகள் சினம் தணிந்தாள். பத்மாவதியைப் பரிவுடன் நோக்கினாள். அண்ணலோடு அவளும் இருக்க இசைவு தந்தாள். (தொடரும்)

## இலங்கையில் பேருந்துகளில் டீசலுக்கு பதில் மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படுகின்றது?

(கொழும்பு)

இலங்கையில் பேருந்துகளில் டீசலுக்கு பதிலீடாக மண்ணெண்ணெய் பயன்படுததப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பேருந்துகளில் இவ்வாறு மண்ணெண்ணெய் பயன்படுத்தப்பட்டு வருவதாகப் பயணிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடத்திய விசாரணைகளின் மூலம் இந்த விடயங்கள் தெரியவந்துள்ளன. செலவை கட்டுப்படுத்தும் நோக்கில் டீசலுடன் சில பேருந்து சாரதிகள் மண்ணெண்ணெய் கலந்து பேருந்துகளை செலுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு டீசலுக்கு பதிலீடாக மண்ணெண்ணெய் பயன்படுத்தப்பட்டு வருவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்னவும் தெரிவித்துள்ளார்.

இதனால் சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படுவதுடன், பேருந்துகளை பராமரிப்பதிலும் சிரமங்கள் ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளார். நிவாரண விலை அடிப்படையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

மார்பக புற்றுநோயினை உறுதிப்படுத்திட, மார்பக கதிர்ப்படம் (Mamogram) அல்ட்ரா சவுண்ட் ஸ்கான் சோதனை (USS), இழையவியல் சோதனை போன்றவை செய்யப்படலாம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம் மாநகர சபை

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ அனைத்திலும் கடவுளைக் காண்பது தான் மனிதனின் லட்சியம். அனைத்திலும் பார்க்க முடியாவிட்டால், நாம் மிகவும் நேசிக்கும் ஒன்றிலாவது பார்க்க வேண்டும்.

❖ அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒரு போதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மனநிலைக்கு, இதயம் ஒருவனை அழைத்துக் கொண்டு போகிறது.

❖ உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்குமே கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

❖ [illegible] மனத்தை உயர்ந்த எண்ணங்களினால் நிரப்புங்கள், நாட்கணக்காகச் சிந்தியுங்கள், தோல்விகளைப் பொருட்படுத்தாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த மாவட்ட ரீதியிலான இருபது-20 கிரிக்கெட்

## திருநெல்வேலி ரி.சி.சி. சம்பியன்




வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தி வந்த இருபது-20 கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை திருநெல்வேலி ரி.சி.சி. விளையாட்டுக்கழக அணி பெற்றுக்கொண்டது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில். யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி ரி.சி.சி. விளையாட்டுக் கழக அணி விளையாடியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற . திருநெல்வேலி ரி.சி.சி. விளையாட்டுக்கழக அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களை திருநெல்வேலி ரி.சி.சி. விளையாட்டுக்கழகம் பெற்றது.

பதிலுக்கு 130 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என களமிறங்கிய பல்கலைக்கழக அணி, 19 ஓவர்களில் 105 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, சகல விக்கெட்டுகளையும் பறி கொடுத்தது.

இதனால், திருநெல்வேலி ரி.சி.சி. விளையாட்டுக் கழக அணி. 24 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இதன்மூலம் வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த இருபது-20 முதலாவது கிண்ணத்தை தனமாக்கிய பெருமையை திருநெல்வேலி ரி.சி.சி. விளையாட்டுக்கழக அணி பெற்றுக்கொண்டது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சென்.மேரிஸ் அணி வெற்றி




உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு ஒன்றிற்கான போட்டியில் முதல் பாதியில் பெற்றுக் கொண்ட கோல்களுடன் 2:1 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் அணி சிவில் பாதுகாப்பு அணியுடன் வெற்றி பெற்றது.

பிற்பாதி ஆட்டத்தில் சென்.மேரிஸ்இரு அணிகளும் எந்தவிதமான கோலும் போடாமல் போட்டி முடிவு பெற்றது. சென்.மேரிஸ் அணி சார்பாக நிதர்சன் யூட் கோல்களைப் போட்டனர். (க)

# அல்வாய் இளைஞர்களின் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## King Star சம்பியன்



அல்வாய் இளைஞர்களின் கரப்பந்தாட்ட (overgame) கிண்ணத்தை கைபற்றியது king star(துர்க்கா) அணி. ரசிகர்களின் கரகோசங்களின் மத்தியில் இளைஞர்களின் கிண்ணம் king star கைகளில் தஞ்சம் புகுந்தது.

நடைபெற்ற போட்டியில் 26:19 என்ற செற்கணக்கில் குணசேகரா அணியினை வீழ்த்தி வெற்றியீட்டியது king star.இரண்டாம் இடத்தினை குணசேகரா அணியும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் அரியாலை சனசமூக நிலையத்தை எதிர்த்து ஆடிய உடுவில் அம்பாள் அணி மூன்றாம் இடத்தினை தனதாக்கிக் கொண்டது. (க)

# மைலோ கிண்ண உதைபந்தாட்டம்

# அடுத்த சுற்றுக்கு முன்னேறியது பலாலி விண்மீன் வி.கழகம்



மைலோ கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இரண்டாவது போட்டியிலும் பலாலி விண்மீன் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு நுழைந்துள்ளது.

நேற்று முன்தினம் 22 ஆம் திகதி திக்கம் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது போட்டியில் கழுகுகள் விளையாட்டுக் கழகம் சமுகமளிக்காமையால் அடுத்த போட்டியில் வல்வை வி.க. எதிர்கொண்டது.

இப்போட்டியில் 01:00 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது பலாலி விண்மீன்.

விண்மீன் அணி சார்பாக அருண் ஒரு கோலினைப் போட்டு வெற்றியை உறுதி செய்தார். (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் திக்கம் இளைஞர் வெற்றி




மைலோ கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இரண்டாவது போட்டியிலும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு நுழைந்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகத்துடன் மோதிய போட்டியில் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றதனால் வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்கு வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் திக்கம் இளைஞர் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளார்கள். (க)

# வலிகாமம் பாடசாலைகள் உதைபந்தாட்ட குழு உருவாக்கம்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அதன் ஒரு உபகுழுவாக வலிகாமம் பாடசாலைகள் உதைபந்தாட்டக் குழு என்ற அமைப்பு நேற்று முன்தினம் 22 ஆம் திகதி மாலை 6.30 மணியள [illegible] பெற்ற சந்திப்பில் உருவாக்கம் பெற்றுள்ளது. இதன் நோக்கம் வலிகாமம் கல்வி வலயத் திற்குட்பட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்ட திறனை மேலும் அபிவிருத்தி செய்வ தாகும்.

இந்தக் குழுவின் தலை வராக எஸ்.உதயனன், செயலாளராக கே.பகீரதன், பொருளாளராக சுகந்தன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். 11 பேர் கொண்ட நிர்வாகக் குழுவாக அமைக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டுக்கொல்லப்பட்ட...

யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் பகுதியில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட இளைஞரின் சடலமானது உடற்கூட்டு பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மணியம் தோட்டம் உதயபுரம் கடற்கரை வீதி சந்திக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இருவர் மீது பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

இத்துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் மேற்குறித்த பகுதியை சேர்ந்த 24 வயதுடைய தொன்போஸ்கோரிஸ்மன் என்ற இளைஞன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்திருந்தார்.

துப்பாக்கி குண்டானது குறித்த இளைஞனின் நெஞ்சு பகுதியூடாக சுவா சப்பையை துளைத்து முதுகுவழியாக வெளியேறியிருந்தது. இதன்போது ஏற்பட்ட அதிகளவான இரத்தபெருக்கினால் குறித்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

உயிரிழந்தவரின் சடலமானது உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் நேற்று மாலை 5.15 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மேலும் குறித்த துப்பாக்கி பிரயோக சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பொலிஸ் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் உள்ளிட்டவர்களும் இவ் விசாரணை நவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அப்பொலிஸ் அதிகாரி தெரிவித்திருந்தார். (ம-4)

## தீவிர-சிகிச்சை...

னியா அல்லது யாழ்ப்பாண நீதிமன்ற ளில் நடைபெற வேண்டும் என கோரி கடந்த மாதம் 25 ஆம் திகதியில் இருந்து இன்று வரை உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் உடல் நிலை மிகவும் மோசமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் தற்போது சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் கைதிகளின் உறவுகளும் பல்கலைக் கழக மாணவர்களும் அண்மையில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். நாளை தீர்வை தருவதாக ஜனாதிபதி உறுதியளித்ததாக கலந்துரையாடல் மேற்கொண்ட தரப்புகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் உறுதியான தீர்வு வரும் வரை து போராட்டத்தை கைவிட மாட்டோம் என தெரிவித்த கைதிகள் தமது போராட்டத்தை தொடர்ந்தனர். இந்த நிலையிலேயே இவர்கள் நேற்று உயிருக்கு ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

## சிற்றூர்தி-மோ.விபத்து...

அந்தோனியார் வீதி வழியாக வந்து பிரதான வீதியை கடந்து வலது பக்கமாக கந்தரோடை பக்கம் திரும்ப முற்பட்டுள்ளார்.

அப்போது கந்தரோடை பக்கமாக இருந்து அதி வேகமாக வந்த சிற்றூர்தி ஒன்று மோட்டார் சைக்கிளில் வந்த அவர்களை மோதியுள்ளது. 30 மீற்றர் தூரத்தில் பிரேக் பிடித்தபடி அந்த சிற்றூர்தி வந்திருந்தும் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே மேற்குறித்த நபர் படுகாயம் அடைந்ததுடன் அவருடன் வந்த நபர் சிறு காயங்களுக்குள்ளாகியிருந்தார்.

உடனடியாக இவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் நேற்று மாலை மேற்குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயரிழந்துள்ளார். குறித்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார்.(ம-9,30)

## யாழ் நகரில்...

வீதியில் அமைந்துள்ள வங்கி ஒன்றுக்கு சென்றுவிட்டு மீண்டும் வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## பேருந்தில் கஞ்சா...

த்திச் செல்லப்படுவதாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து, கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான விசேட முறியடிப்பு பொலிஸ் படைப்பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்னம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினர் நேற்று திங்கட்கிழமை பளைக்கும்-பரந்தனுக்கும் இடையே விசேட வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்திற் கிடமான வகையில் இயக்கச்சி பேருந்து தரிப்பிடத்தில் நின்ற குடும்பப் பெண்ணை சோதனையிட்ட போது நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு பயணப் பையில் வைக்கப்பட்டிருந்த கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபரிடம் நடைபெற்ற ஆரம்ப விசாரணைகளின்போது, தனது சகோதரனினால் வழங்கப்படும் கேரளக் கஞ்சாவை பளைப் பகுதியில் உள்ள ஆழியவளையில் இருந்து திருகோணமலைக்கு கடத்திச் சென்று கொடுத்து வருவதாகவும் இதற்கு கூலியாக 10 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படுவதாகவும், இவ்வாறு கிடைக்கும் பணத்தை கொண்டு கணவனால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள தனக்கும் தனது 02 பிள்ளைகளுக்கும் தேவையான உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதுடன், ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் கைதான சந்தேக நபரை பளைப் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும், அதன் பின்னரான நீதி மன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-15,312,60)

## 21 நாள் பெண்...

மேற்படி பெண்குழந்தைக்கு கடந்த 21 ஆம் திகதி இரவு காய்ச்சல் இருந்துள்ளது. அப்போது தாய் ஈரத்துணியால் தடவி விட்டு பால் கொடுத்துள்ளார். பின்னர் 22ஆம் திகதியும் அதிகாலை காய்ச்சல் இருந்த போது முதலுதவி அளித்துள்ளார்கள். அன்றைய தினம் மாலை தனியார் வைத்தியசாலையில் குழந்தைக்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.

பின்னர் 23ஆம் திகதி அதிகாலை பால் கொடுப்பதற்கு தாய் குழந்தையை எழுப்பிய போது குழந்தை பேச்சு மூச்சின்றி இருந்துள்ளது. உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்தபோது குழந்தை உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9,104)

## போர்க்குற்ற வழக்கால்...

இலங்கை வந்துள்ள உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமை உத்தரவாதங்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிரிவ் தனது இரண்டு வார கால விஜயத்தின் முடிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முன்னாள் இராணுவத் தளபதி ஜயசூரியவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"உள்நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ பொறுப்புக் கூறல் கோரப்படலாம்" என அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் 2009ஆம் ஆண்டு, வைத்தியசாலைகள் மீது தாக்குதல்களை நடத்தியதுடன், ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படுவதற்கும் காணாமல் ஆக்கப்படுவதற்கும், சித்திரவதை செய்யப்படுவதற்கும் காரணமாக இருந்த ராணுவ குழுக்களுக்கு பொறுப்பதிகாரியாக செயற்பட்டிருந்தார் என தென் அமெரிக்கா நாடுகளில் மனித உரிமை குழுக்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் ஜயசூரியவுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தி வழக்கு தாக்கல் செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்த மோதல்களுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் உரிய நம்பகமான பொறுப்பு கூறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்றும் பப்லோ டி கிரிவ் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதற் தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்த அவர், இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்த விஜயத்துடன், நான்கு விஜயங்களை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் வழங்கும் நோக்கில் முதல் மூன்று விஜயங்களும் அமைந்திருந்ததாகக் கூறிய அவர், இலங்கை அரசு உறுதியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஒரு சிக்கலான சூழலில், ஐ.நாவின் மனித உரிமைப் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் தேவைக்காக இந்த விஜயம் அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக சர்வதேச நியமங்களுக்கு அமைவாக புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும். காணாமல் போனோருக்கான அலுவலகம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அதற்கான அலுவலகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது அரச தரப்பினர் மட்டுமல்லாமல் நாட்டின் வடக்கு கிழக்கு மற்றும் தென்பகுதிகளுக்கும் விஜயம் செய்து பல்வேறு தரப்பினரையும், பாதிப்புக்கு உள்ளானவர்களையும் சந்தித்துள்ளதாகவும், இந்த சந்திப்புக்கள் தொடர்பிலான அறிக்கையும், நிலைமைகள் தொடர்பிலான தனது பரிந்துரைகளையும் உள்ளடக்கிய முழுமையான தோர் அறிக்கை அடுத்த வருடம் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# சைட்டம் தொடர்பான அரசின் நிலைப்பாடு சில நாட்களில் அறிவிக்கப்படும்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

சைட்டம் நிறுவனம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அனைத்து பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண முடியும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தெஹியோவிட, திம்பிரிபல ஸ்ரீ அபிநவாராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தங்க வேலியை திறந்துவைக்கும் புண்ணிய நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சிறந்ததோர் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு பிரிவினை தடையாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளிலும் அபிவிருத்தி செயற்பாடுகளிலும் பிரிந்து நிற்காது அனைவரும் ஒன்றிணைந்து கூட்டாக பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு நாட்டை வறுமையிலிருந்து விடுவிப்பதற்காக தேசிய உணவு உற்பத்தி ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளதுடன், கிராமிய மக்களை வறுமையிலிருந்து விடுவித்து அவர்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவும் நாட்டின் சுபீட்சத்திற்காகவும் கிராம சக்தி மக்கள் இயக்கம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவித்த ஜனாதிபதி இந்த அபிவிருத்திப் பணிகளுடன் இணைந்து கிராமங்களையும் நாட்டையும் அபிவிருத்தி செய்வதற்கு பிரிவினைகளை மறந்து அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்று குறிப்பிட்டார்.

நேற்று பிற்பகல் திம்பிரிபல அபிநவாராம விகாரைக்கு சென்ற ஜனாதிபதி சமயக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் தங்க வேலியை திறந்துவைப்பதற்கான நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார்.

சமுர்த்தி பெறுவோர், விசேட தேவையுடையவர்கள், உயர்கல்வி பெறும் மாணவர்கள் மற்றும் சமய நிறுவனங்களுக்கு ஒரு கோடி நாற்பது லட்சம் ரூபா இதன்போது பகிர்ந்தளிக்கப்பட்டது.

தெஹியோவிட, திம்பிரிபல ஸ்ரீ அபிநவாராமாதிபதி உடகம தம்மதிலக நாயக தேரரினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதுடன், அமரபுர மகா நிகாயவின் மகாநாயக தேரர் கொடுகொட தம்மாவாச மகாநாயக தேரரினால் விசேட அனுசாசன உரை நிகழ்த்தப்பட்டது.

மகாசங்கத்தினர், அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிடிய, பிரதி அமைச்சர் துஷ்மந்த மித்ரபால, பாராளுமன்ற உறுப்பினர் துசிதா விஜேமான்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

## சட்டவிரோத மணல் கடத்தல்

### பொலிஸாரால் மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

அனுமதி பத்திரமன்றி மணல் ஏற்றி சென்ற உழவு இயந்திரம் மற்றும் சாரதியை தெல்லிப்பழை பொலிஸார் மடக்கி பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று காலை 6.30 மணியளவில் அளவெட்டி பத்தானை சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (ம-104)

## நிலைமாறு நீதி...

ளர் பப்லோ டி கிரெய்ப் இங்கு அவதானித்தவைகளை அறிக்கையாக ஜெனிவா ஐ.நா மனித உரிமைகள் சபையின் மார்ச் மாத அமர்வில் அறிக்கையாக முன்வைப்பார் என தெரியவருகிறது. (ம)

## பிரச்சினைக்குரிய...

தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒருமித்த நாடு எனும் சொல், பல பிராந்தியங்கள் இணைந்து உருவாகும் ஒரு நாடு என்ற கருத்தைக் கொடுப்பதாகவும் இது தற்பொழுதுள்ள "ஏகீய" எனும் சிங்களச் சொல் குறிப்பிடும் கருத்துக்கு முற்றிலும் வேறுபட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அறிக்கையிலுள்ள இப்பதம் சிக்கலுக்குரியது என்ற கருத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றது. இந்த விடயத்தில் மாற்றம் செய்வது முக்கியமானது என்பதையும் இச்சங்கம் கூறிக் கொள்கின்றது எனவும் சட்டத்தரணி சில்வா மேலும் அறிவித்தார்.

சுமார் ஒன்றரை மணி நேரம் சட்டத்தரணிகள் சங்க தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் தலை...

பக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

ஐ.நா தமது அதிகாரத்தை கலவரங்களும் யுத்தங்களும் இடம்பெறுகின்ற நாட்டிலேயே காண்பித்துக் கொள்ளவேண்டும் என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான சோஷலிச மக்கள் முன்னணி தெரிவிக்கின்றது.

சோஷலிச மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்றது. இதன் போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார.

வடக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்வரை ஐக்கிய நாடுகள் இலங்கை மீதான தலையீடுகளை நிறுத்தப்போவதில்லை என ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெசப் கூறியிருக்கின்றார்.

இலங்கைக்குள் தலையீடு செய்வதற்கு ஐக்கிய நாடுகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை. அதிகமான கலவரங்களும், மனிதப் படுகொலைகளும் இடம்பெறுகின்ற நாடுகளில் ஐ.நாவின் தலையீடுகள் அவசியமாகும்.

இன்று இலங்கையில் ஐ.நாவின் தலையீடானது எமது தேவைகளுக்கு அமையவே இடம்பெறவேண்டும். மாறாக எமக்கு மேலாக அவர்கள் தங்களது அதிகாரத்தை இங்கே காண்பிடிக்க முடியாது.

எமது ஆட்சியின்கீழ் 13ஆவது திருத்தத்தின் கீழ் வடமாகாண சபையை நாங்களே உருவாக்கினோம். தேர்தலை நடத்தியதும் நாங்களே. அங்கு இராணுவம் அதிகளவில் இருந்தபோதிலும் எந்த அழுத்தங்களும் இருக்கவில்லை.

13ஆயிரம் புனர்வாழ்வு பெற்ற முன்னாள போராளிகளை விடுவித்து சமூகமயப்படுத்தினோம். அதேபோல காணிகளையும் மீள ஒப்படைத்து வந்தோம் என்றார். (ம)

## முப்படையினரை...

போது, மணியந்தோட்டம் உதயபுரம் கடற்கரை வீதியில் நின்றிருந்த இனந் தெரியாதோரால் துப்பாக்கியால் சுடப்பட்டு சிகிச்சை பலனின்றி சம்பவம் தினம் அன்று இரவு உயிரிழந்தார்.

இந்த விடயம் யாழ் குடாநாடு முழுவதிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன் மக்கள் மத்தியில் அச்சநிலை தோன்றியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற போதும், இதுவரை யாரும் பொலிஸாரால் கைது செய்யப்படவும் இல்லை, பொலிஸில் சரணடையவும் இல்லை.

இந்த நிலையில் பொலிஸார் நேற்றைய தினம் அப்பகுதியில் மேற்கொண்ட தொடர் தேடுதல் மற்றும் விசாரணையின் அடிப்படையில் முக்கிய தடயங்களை பெற்றுள்ளதுடன், இந்த சூட்டு சம்பவம் தொடர்பாக, முப்படைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மேலதிக தரப்பினரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்துள்ளனர். அதனடிப்படையில் அப்பகுதியினர் மீது தீவிர விசாரணை இடம்பெறவுள்ளதாக அறிய முடிகிறது.(ம-9)


### விற்பனைக்கு

தரமான கொங்கிறீற் கல்லு
விற்பனைக்கு உண்டு.
விலை - 39/=
(1113)
தொடர்பு: 0774163146

### பணியாட்கள் தேவை

புதுக்குடியிருப்பு நகரில் இயங்கி வரும் முத்துமாரி அம்மன் சைவ உணவகத்திற்கு உணவு பரிமாறுபவர்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(C-140)
077 344 9621, 0777 353 589

### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண் ,மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-055)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

### பணிநிலை வெற்றிடம்

- ✦ கணனி இயக்குநர் (பெண்)
- ✦ தேசிய அபிவிருத்தி லொத்தர் விற்பனை செய்வதற்கு யாழ்.நகர், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய இடங்களுக்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

0775164928, 0212215777


### யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
## சேவைநலன் பாராட்டுதல்

ஓய்வுபெறும் வரலாற்றுப் பாட ஆசிரியர்
**திருமதி தனலட்சுமி சண்முகரத்தினம்**
(B.A, Dip in Edu)



**சேவை விபரம்**
யா/நயினாதீவு கணேச க.ம.வி - 1987 - 1990
யா/வேலணை ம.ம.வி - 1991 - 1994
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் - 1995 - 2001
யா/ஆனைக்கோட்டை R.C.T.M.S - 2001 - 2010
யா/பெரியபுலம் ம. வி - 2010 - 2017

அகவை அறுபதில் தன் சேவையை பூர்த்தி செய்யும் மணிவிழா நாயகியை பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென உளம் மகிழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
(1105)


ஹொட்டேல் பயிற்சி பெற்றவர்கள் & பணியாளர்களுக்கு
கொழும்பு TRANS GULF (PVT) LTD மூலம்
**சிகரம் தரும்**

அமெரிக்க முன்னணி நிறுவனங்களான
McDonald's — சவுதி கிளை
Marriott. HOTELS & RESORTS — குவைத் கிளை

என்பவற்றில் மாதம்
**Rs. 50-175000/- வரை உழைக்க**

| | |
|---|---|
| Service Crew உணவு பரிமாறுநர் 150பேர் | Maintenance Man சுத்திகரிப்பு உதவியாளர் 50பேர் |
| F&B, Kitchen, Housekeeping & Technical Staff உயர் ஹொட்டேல் பணிநிலைகள் 175பேர் | TAXI DRIVERS டக்சி ட்ரைவர் QATAR 150பேர் |

(C-143)

ஹொட்டேல் பயிற்சி/அனுபவம் இல்லாதவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படும்
உணவு - தங்குமிடம் - விமானச்சீட்டு - மருத்துவ வசதி/வயதெல்லை 21-45
முற்பதிவு அவசியம் ☎ 0777 324 004

TGL SINCE 1990
Trans Gulf (Pvt) Ltd.,
90, First Floor, Chatham Street, Colombo 1
T.P.: 0114426222 www.tgl.lk

SIKARAM ACADEMY
Business - Hospitality - Media
FAST TRACK to CAREERS
175, 1ம் குறுக்குத்தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 - 222 00 11 www.sikaram.lk

### வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கணனி அறிவுள்ள பெண் ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும்.
செல்வா கொமினிகேசன்
(1084) 124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

### அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்

0768226243

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்




திருச்செல்வம்-மரியரோகினி
அமெரிக்க விசா வெற்றியாளர்
(C-055)

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரே | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |


## 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
10 . 03 . 1951

ஆண்டவன் அடியில்
24 . 09 . 2017

**அமரர் படைவீரசிங்கம் சேனாதிராசா**
(உரிமையாளர் – ராஜா மருந்துக்கடை, சுன்னாகம்)

குடும்பத்தின் குலவிளக்காய் குறைவிலாது பார்த்தீரே!
குவலயத்தில் குறைவின்றி புண்ணியஞ் செய்தீரே!
குறைகளின்றி வாழ்ந்தீரே! குதூகலமாய் இருந்தீரே!
கும்பிட்ட குலதெய்வம் குறையிலே அழைத்ததேன்?

விழிசிட்டி,
தெல்லிப்பழை

தகவல்:
மனைவி
(1104)

## எட்டாம் ஆண்டின் ஆறாத நினைவலைகள்

அமரர்
**காசிப்பிள்ளை செல்லத்துரை**



மலர்வு : 03.02.1939 - உதிர்வு : 23.10.2009

"தெய்வங்கள் கூட தோற்றே போகும்
அப்பா உங்கள் அன்பிற்கு முன்னே"
ஆண்டுகள் எட்டென்ன ஆயிரம்தான்
ஆனாலும் என்றும் நீங்காது எம்
மனதில் உங்கள் அன்பான
நினைவலைகள். ஆண்டவன்
அடியில் சாந்தியுடன்
வாழ்வீர்களாக!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(H14)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org